பக்கங்கள்: எட்டு

Registered as a Newspaper

A/L 90
கணித வகுப்புகள்
சமநிலை, எறியம்
(O/L பகுதி)
இருபடிக்கோவை
திரிகோணகணித
சமன்பாடுகள்
By
திரு. வேக்டர்
Sat, Sun 12-30 - 2-45
எக்ஸ்பிறஸ்
இன்ஸ்ரிரியூட்
இருபாலை

உதயன்

விலை
ரூ 2. 50

A/L 89
கணித வகுப்புகள்
வகையிடுப் பிரயோகம்
நீள்வளையம்
காவிகள்
கணத்தாக்கு
By
திரு. வேக்டர்
சனி, ஞாயிறு 6-30 - 8-30
எக்ஸ்பிறஸ்
இன்ஸ்ரிரியூட்
இருபாலை.

கூர்: 4 ஸிபவ ஞு தை மீ 06 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1409 ஜ ஆகிர் பிறை 10 (19-01-1989) UTHAYAN -A LIVELY TAMIL DAILY கதிர்: 48

நட்புறவு உடன்படிக்கை; இந்தியாவும் வரவேற்கிறது

பிரேமாவிற்கு ராஜீவ் செய்தி
தூதுவர் டிக்ஸிற் கையளித்தார்

கொழும்பு, ஜனவரி 19

✶ இலங்கையுடன் நட்புறவு மற்றும் ஒத்துழைப்பு சம்பந்தமான இருதரப்பு உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொள்வதை இந்தியாவும் வரவேற்கிறது.

✶ இலங்கையில் உள்ள அமைதிப்படையினரைத் திருப்பி அழைப்பதையும் இந்தியா விரும்புகிறது.

இவ்வாறு குறிப்பிடும் செய்தி ஒன்றை இந்தியப்பிரதமர் திரு. ராஜீவ்காந்தி இலங்கை ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசாவுக்கு அனுப்பி வைத்திருக்கிறார்.

கொழும்பில் உள்ள இந்தியத் தூதர் திரு. ஜே. என். டிக்ஸிற் இந்தச் செய்தியை நேற்று முன்தினம் மாலை ஜனாதிபதி திரு. பிரேமதாஸாவைச் சந்தித்து கையளித்தார்.

அச்செய்தியில்— ஜனாதிபதி பிரமதாஸ பிரேமதாஸாவுடன் ✶ இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் தமிழருக்கு ஓரளவு சுயாட்சி வழங்கும் வடக்கு கிழக்கு மாகாண சபையை பலப்படுத்தக்கூடியதாக காத்தமான நடவடிக்கைகளை இந்தியா கவனத்துக்கு எடுத்துக் கொண்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

செய்தியைக் கையளித்த தூதுவர் டிக்ஸிற் அதுகுறித்து ஜனாதிபதி பிரேமதாஸாவுடன் கலந்துரையாடினார்.

ஜனாதிபதி பிரேமதாஸா திரு. டிக்ஸிற்றிடம் —

உத்தேச நட்புறவு ஒத்துழைப்பு உடன்படிக்கையின் நகல் ஒன்றை இலங்கை அரசு பத்துத் தினங்களில் புதுடில்லிக்கு அனுப்பிவைக்கும் என்று உறுதியளித்தார்-

இதன்பின்னர் பி.பி.ஸி.யு பேட்டியளித்த தூதுவர் டிக்ஸிற் 'இந்த ஆண்டுக்கான அமைதிப் படையின் முதற்கட்ட விலக்கல் முடிவடைந்து விட்டது' என்றார்.

தரை நிலைமையை (8 ஆம் பக்கம் பார்க்க)

கனடாவில்
அகதிகள் ஆணையாளராக ஸ்ரீஸ்கந்தராஜா நியமனம்

ஒட்டாவா, ஜன 19

கனடா நாட்டில் அகதிகள் யார் என்பதை நிர்ணயிக்கும் சபையின் ஆணையாளர்களில் ஒருவராக திரு ரி ஸ்ரீஸ்கந்தராஜா என்பவர் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

கனடா அரசே இவரை நியமித்திருக்கிறது

இந்த நியமனத்தை கனடாவில் உள்ள ஐக்கிய இலங்கைக்குழு ஆட்சேபித்திருக்கிறது. இது தொடர்பாக இக் குழு கனடா அரசுக்கும் முறையிட்டிருக்கிறது.

திரு ஸ்ரீஸ்கந்தராஜா முன்னர் கனடாவில் ஈழம் அமைப்பின் தலைவராக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

(உ-எ)

★ வடக்கு, கிழக்கில்

காணி அபிவிருத்திக்கு ரூ. 2 கோடி 90 லட்சம்
இலங்கை அரசு ஒதுக்கீடு

கொழும்பு, ஜன 19

வடக்கு-கிழக்கு மாகாண காணி அபிவிருத்திக்கு என இலங்கை அரசு 2 கோடி 90 லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளதாக மாகாண அமைச்சர் திரு. எம். கணேசலிங்கம் தெரிவித்தார்.

புனரமைப்புப் பணிக்கு என்று செயற்குழு ஒன்றும் நியமிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

திருகோணமலையில் சோவியத் யூனியனின் உதவியுடன் எனல் மின் நிலையம் ஒன்றை அமைப்பது குறித்து இலங்கை அரசு ஆலோசனை நடத்திவருவதாக மாகாண போக்குவரத்து அமைச்சர் ஜனப் அபுபூசுப் சொன்னார்.

5 ஆண்டுகளில் மின் துறையில் தன்நிறைவு காண தனியான மின் சாரத் திட்டங்களை ஒன்றை அமைப்பது பரிசீலனையில் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (ஒ-எ)

சுபநேரம்

19 -1 - 1989
தை - 06
வியாழக்கிழமை
உபநேரம்:
8 05 முதல் 9.35 வரை
ராகுகாலம்:
2.05 முதல் 3 35 வரை
பிரதோஷ விரதம்

முச்சந்திமுரளி

உடனே. உடனே அக்ஷன் எடுக்கிறார் உவர் பிரேமர் என்ன தேர்தல் ஸ்டண்டோ அல்லது.....?

வாகனம் மீட்கப்பட்டது

கொழும்பு ஜன 19

கட்டுப்பெத்த இலங்கை வங்கியில் கொள்ளையிட பயன்படுத்தப்பட்ட ஹைஏஸ் வாகனம் நுகேகொட அருகில் அனாதரவான நிலையில் கைவிடப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

அந்த இடத்தில் இருந்து சிலயார் தூரத்தில் இரண்டு துப்பாக்கிகளும் கிடக்கக் கண்டுபிடிக்கப்பட்டன. (உ-எ)

நெடுந்தீவுக் கடற்பகுதியில்

கடற்படை படகு மோதி
மீனவரின் படகு மூழ்கியது

குருநகர் ஜன 19

நெடுந்தீவு, பனங்காணி முனைப்பகுதியில் கடற்றொழிலில் ஈடுபட்டிருந்த குருநகர்ப் பகுதி இயந்திரப்படகுஒன்றின் மீது ஸ்ரீலங்கா கடற்படையைச் சேர்ந்த இயந்திரப் படகு ஒன்று மோதியது. இதனால் தொழிலில் ஈடுபட்டிருந்த படகு தகர்ந்து மூழ்கியது.

படகில் தொழிலில் ஈடுபட்டிருந்த மூன்று தொழிலாளர்களில் இருவரை வேறு படகுகள் நேற்றுக் காலை கரை சேர்த்தன. ஒருவரைக் காணவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்றது.

ஸ்ரீலங்கா கடற்படையின் படகு தொழிலாளர்களின் படகுகள் மோதியதை அடுத்து 'போக்கஸ்' வெளிச்சம் போட்டுப் பார்த்து விட்டு உதவி ஏதும் செய்யாது சென்றுவிட்டதாகக் கூறப்பட்டது.

(ஒ-51)

மாகாண ரீதியில் மக்கள் தொண்டர்படை
அமைக்க அமைச்சரவை முடிவு

கொழும்பு, ஜன. 19

ஆட்திரட்டல்- துணைப் பிணைச் சட்டத்தின் கீழ் மாகாண ரீதியில் மக்கள் தொண்டர் படைகள் நிறுவப்படும்.

அமைச்சரவை நேற்று இவ்வாறு தீர்மானித்தது

இது சம்பந்தமாக சில பிரமாணங்களும் அமைச்சரவையினால் நேற்று அங்கீகரிக்கப்பட்டன.

அவற்றின்படி —

★ சட்டம் - ஒழுங்கை நிலைநாட்டுதல்

★ கலவரத்தைத் தடுத்தல்

★ அரசு உடைமைகளை பாதுகாத்தல்

★ அமைதி, ஒழுங்கை (8 ஆம் பக்கம் பார்க்க)

விராஜ் மென்டிஸ் கைது!
இலங்கை அனுப்பப்படுவார்?

லண்டன், ஜன 19

லண்டன் பொலீஸார் நேற்று மாஞ்செஸ்டரில் தேவாலயம் ஒன்றை முற்றுகையிட்டு இலங்கையரான விராஜ் மென்டிஸைக் கைதுசெய்தனர்.

இலங்கைக்கு அவரை நாடுகடத்தும்படி பிரிட்டிஷ் அரசு ஏற்கனவே உத்தரவிட்டிருந்தது.

1986 டிசம்பரில் விராஜ்மென்டிஸ் பிரிட்டனில் அரசியல் தஞ்சம் கோரியிருந்தார். தமிழ் தீவிரவாதிகளுடன் தொடர்பு வைத்திருந்ததாகஇலங்கை அரசு தன்னைத் துன்புறுத்தும் என்று 32 வயதான மென்டிஸ் காரணம் காட்டியிருந்தார்.

இலங்கைக்கு நாடு கடத்துவதற்கான சவே அவரை நேற்று பொலீஸார் கைது செய்தனர் என ஏஜென்ஸிச் செய்தி ஒன்று தெரிவித்தது.

வெளிக்கிழமைக்கு இடையில் தான் விரும்பும் நாட்டுக்கு மென்டிஸ் செல்லலாம்; தவறின் அவரை இலங்கைக்கு அனுப்பிவைப்போம். — இப்படி பிரிட்டிஷ் அரசு அறிவித்துள்ளது. (உ-எ)

(முன்னர் வந்த செய்தி 8ஆம் பக்கத்தில்.)

நீதிமன்ற அவமதிப்பு மனு:

பிரி.மஞ்சித்சிங் மீதான விசாரணை மார்ச் 1 இல்

இந்திய அமைதிப் படை வவுனியா முகாம் பொறுப்பு அதிகாரி பிரிகேடியர் மஞ்சித்சிங்குக்கு எதிராகமேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நீதிமன்ற அவமதிப்பு மனு மீதான விசாரணை மார்ச் மாதம் முதலாம் திகதி நடைபெறும்.

மேன்முறையீட்டு நீதிபரசர் ஞ. விக்னராஜா இதனை அறிவித்தார்.

இந்த மனுவை விசாரிக்க திகதி நிர்ணயிக்கப்படவேண்டும் என்று மனுதார் தரப்புச் சட்டத்தரணி ஏ விநாயகமூர்த்தி கேட்டுக்கொண்டதை நீதியரசர் ஏற்று திகதி நிர்ணயித்தார்.

ஆட்கொணர்வு மனு ஒன்றில் பிரதிவாதியாக குறிப்பிடப்பட்ட பிரிகேடியர் மஞ்சித் சிங் அமைப்பாணை அனுப்பியும் நீதிமன்றத்தில் சமுகமளிக்காததால் நீதிமன்றத்தை அவமதித்தார் என்று மனுவில் கூறப்பட்டுள்ளது. (ஒ-எ)

கூட்டணிப் பிரமுகர்கள் நேற்று யாழ்நகரில்
படை அதிகாரிகளுடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், ஜன 19

தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகர்கள் நேற்று யாழ்ப்பாணம் வந்தனர். அவர்கள் இந்திய அமைதிப்படை உயரதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

திரு. எம். சிவசிதம்பரம், திரு வெ.யோகேஸ்வரன், டாக்டர் நீலன் திருச்செல்வம், திரு.ஆர். சம்பந்தன் ஆகியோரே நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்தனர்.

இவர்கள் இந்திய அமைதிப் படையினரின் உயரதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்திய போதிலும் பேச்சுவார்த்தையின் விவரம் எதுவும் வெளியிடப்படவில்லை

பிற்பகல் 2 மணி அளவில் திரு. ஆர். சம்பந்தன் மட்டும் திருகோணமலைக்குச் சென்றதாக அறியவந்தது. (ஒ-10)

குண்டுகள் கண்டுபிடிப்பு

திருகோணமலையில் சேதமாக்கப்பட்டிருக்கும் நீதிமன்ற கட்டட வளவுக்குள் மூன்று குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

இக்குண்டுகளை இந்திய அமைதிப்படையினர் பின்னர் செயலிழக்கச் செய்தனர்: (உ-150)

எண்மர் மரணம்

திரிபுராவில் நேற்று இடம்பெற்ற ட்ரக் விபத்து ஒன்றில் 8 பேர் உயிரிழந்தனர். (எ)

மா கப்பல் காங்கேசன் வந்தது

யாழ்ப்பாணம், ஜன 19

கடந்த திங்கட்கிழமை 975 மெட்ரிக் தொன் மாவை ஏற்றிக்கொண்டு ஒரு கப்பல் காங்கேசன் வந்து சேர்ந்தது.

இன்னும் ஓரிரு தினங்களில் மேலும் 300 மெட்ரிக் தொன் மாவும், 300 மெட்ரிக் தொன் அரிசியும் ரயில் மூலம் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஒ-ஐ)

✶ யாழ். மாவட்டத்தில்

வீடமைப்பு கடன் வழங்க ரூ 64 லட்சம் நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், ஜன19

1989 ஆம் ஆண்டு யாழ் மாவட்டத்தில் நகர வீடமைப்புத் திட்டகடன் வழங்குவதற்காக 64 லட்சத்து 60ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் யாழ்மாவட்ட முகாமையாளர் திரு. ஏ ஜோசப் மரியான் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

இதன்படி யாழ் மாநகர சபை எல்லைக்குள் வசிக்கும் 475 குடும்பங்களுக்கு கடன் வழங்குவதற்கு 47 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும்—

சாவகச்சேரி, பருத்தித்துறை வல்வெட்டித்துறை ஆகிய நகர சபைகளில் வசிக்கும் (8 ஆம் பக்கம் பார்க்க)

நெடுந்தீவில் நேற்றும் தேடுதல் தொடர்ந்தது

நெடுந்தீவு, ஜன 19

நெடுந்தீவில் படையினர் நேற்று முன்தினம் ஆரம்பித்த தேடுதல் நடவடிக்கைகள் நேற்றுக் காலைவரை தொடர்ந்தது.

தேடுதலின்போது இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். மற்றொரு இளைஞர் காலில் சுட்டுக் காயத்துடன் கைதுசெய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

மேலும் சுமார் பதினைந்து இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

தேடுதல் நடவடிக்கைகள் அடுத்து அரசாங்கப் படகான குமுதினி நேற்று சேவைக்கு விடப்படவில்லை, எனினும் வெளியிடங்களுக்குச் செல்லும் பயணிகளின் வசதிக்காக சங்கப் படகான 'சமுத்திரதாரகை' நெடுந்தீவு - குறிகாட்டுவான் சேவையை மேற்கொண்டிருந்தது.

(உ-111)

பாதுகாப்பு இல்லாத 758 ரயில் கடவைகளுக்கு உடனடியாக காவலர்கள்
விபத்தை அடுத்து ஜனாதிபதி பணிப்பு

நாட்டில் உள்ள பாதுகாப்பற்ற 758 ரயில் கடவைகளுக்கும் வருகிற திங்கள் முதல் காவலாளர்களை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

ஒரு கடவைக்கு இருவர் வீதம் காவலாளர் நியமிக்கப்படுவர்.

உணவுமுத்திரை பெறுபவர்களே இவ்வேலைக்குத் தெரிவுசெய்யப்படுவர்.

ஜனாதிபதி பிரேமதாஸா இதுசம்பந்தமான உத்தரவைப் பிறப்பித்தார்.

அஹுங்கல ரயில் கடவையில் நேற்று ஏற்பட்ட விபத்தைத் தொடர்ந்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (உ-எ)

அதிகார மாற்றம்;
இன்று உயர்மட்ட மாநாடு

வடக்கு — கிழக்கு மாகாண சபைக்கு அதிகாரங்களை மாற்றிக் கொடுப்பது சம்பந்தமாக உயர் மட்டமாநாடு ஒன்று திருகோணமலையில் இன்று நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.

ஆளுநர் லெப்டினன்ட் ஜெனரல் நளின் செனவிரத்ன தலைமைவகிப்பார். முதலமைச்சர் திரு. வரதராஜப் பெருமாளும் ஏனைய மாநில அமைச்சர்களும் இதில் கலந்து கொள்வர்.

அரசு அதிகாரிகளுடன் மத்திய அமைச்சர்கள் சிலரும் மாநாட்டில் கலந்து கொள்வர் என்று இந்திய வானொலி அறிவித்தது. (உ-எ)

அமைச்சரவைக்கு விசேட அறிக்கை

கொழும்பு, ஜன 19

வடக்கு - கிழக்கு மாகாணசபைக்கு அதிகாரங்களையும் கடமைகளையும் ஒப்படைப்பது பற்றிய அறிக்கை ஒன்றை அடுத்த புதன் கிழமைக்குள் அமைச்சரவைக்குச் சமர்பிக்கப்பட வேண்டும்.

மாகாணசபை அமைச்சுச் செயலாளருக்கு ஜனாதிபதி பிரேமதாஸா இப்பணிப்புரையை விடுத்தார்.

★ மாகாண சபைச் சட்டத்தின் கீழ் வகுக்கப்பட்ட அதிகாரங்கள் மற்றும் கடமைகளை செயலாளர்கள் மாகாணசபைகளிடம் ஒப்படைத்து விட்டனரா?

★ மாகாண சபைகள் அவற்றைப் பொறுப்பேற்றுவிட்டனவா?

— இது பற்றிய விவரங்களைக் கொண்டதாக மாகாணசபை அமைச்சுச் செயலாளரின் அறிக்கை இருக்கவேண்டும்.

அதிகாரங்களைப் பெற (8ஆம் பக்கம் பார்க்க)

இளைய கலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

கிளிநொச்சியில் மழை இல்லை; பயிர்கள் அழியும் ஆபத்து!

கிளிநொச்சி, ஜன. 19

கிளிநொச்சி மாவட்டத்தில் இம்முறை பருவ மழை போதியளவு பெய்யாததால் இரணைமடுக் குளத்தில் நீர்மட்டம் வெகுவாகக் குறைந்து விட்டது. இதனால் கால போகப் பயிர்ச்செய்கை அழியும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

இம்மாவட்டத்தில் மழை நீரை நம்பி மானாவாரியாகவும், குளத்து நீரை பெறும் பாய்ச்சல் நிலங்களிலுமாக பல்லாயிரக் கணக்கான ஏக்கரில் இம்முறை நெற்செய்கை பண்ணப் பட்டிருக்கிறது.

பருவ மழை பெய்யாததால் இப்பயிர்கள் அழியும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது.

வழமையாக டிசம்பர், ஜனவரி மாதங்களில் இரணைமடுக் குளத்தில் 30 அடிக்கும் குறையாத அளவு நீர் தேங்கியிருக்கும் ஆனால் இம்முறை தற்போது 8 அடித் தண்ணீரே குளத்தில் உள்ளது.

இது பாய்ச்சல் நிலங்களுக்கு வழங்குவதற்கு போதுமானதல்ல.

இன்னும்இரண்டு வார காலத்திற்குள் பருவ மழை பெய்யாவிட்டால் இப்பயிர்கள் யாவும் அழிந்துவிடும் எனத் தெரிவிக்கப்பட்டது.

(உ-163)

பருத்தித்துறை கிழக்கில் பாடசாலைகள் தரமுயர்வு

பருத்தித்துறை, ஜன.19

பருத்தித்துறை கிழக்குக் கஷ்டப் பிரதேசத்திலுள்ள ஆரம்ப பாடசாலைகள் அனைத்தும் விரைவில் தரம் உயர்த்தப்படவுள்ளன.

ஏற்கனவே ஆண்டு ஒன்று முதல் ஆண்டு 5 வரை வகுப்புக்களை நடத்திய நான்கு பாடசாலைகளை உடனடியாக ஆண்டு 6 நடத்துவதற்கு அனுமதியளிக்கப்பட்டிருக்கிறது.

குடத்தனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, குடத்தனை கரையூர் றோ. க. பாடசாலை, நாகர் கோவில் அ. மி. த. க. பாடசாலை, மாமுனை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை ஆகியன ஜனவரி 5ம் திகதி முதல் கவிஷ்ட உயர்தர பாடசாலைகளாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளன.

மேலும் பருத்தித்துறை கிழக்குக் கஷ்டப் பிரதேசத்தில் நிலவும் ஆசிரியர் பற்றாக்குறையை, சேவை முன் பயிற்சியை முடித்துக் கொண்ட ஆசிரியர்களின் மூலம் விரைவில் போக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க – 118)

எரிபொருள் நிலையம் ப.நோ.கூ. சங்கத்திடம்

அச்சுவேலி, ஜன. 19

அச்சுவேலி எரிபொருள் நிரப்பு நிலையத்தை வலிகிழக்கு வடபகுதி (அச்சுவேலி) பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் பொறுப்பேற்று நடத்துகின்றது.

இதுவரை காலமும் தனியார் நிர்வாகத்தில் செயற்பட்டுவந்த எரிபொருள் நிரப்பு நிலையத்தை பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் பொறுப்பேற்க வேண்டும் எனப் பொதுமக்கள் வலியுறுத்தி வந்தனர்.

பொதுமக்களின் வசதியைக் கருத்தில் கொண்டு எரிபொருள் நிரப்பு நிலையத்தை அச்சுவேலி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் பொறுப்பேற்றுக் கொண்டது.

(ச – 11)

கரவெட்டிப் பகுதியில் கோழிகளுக்கு வைரசுநோய்

கரவெட்டி, ஜன 19

கரவெட்டிப் பகுதியில் ஊர்க் கோழிகளுக்கு வைரசு தொற்றுநோய் வேகமாகப் பரவி வருகிறது. இதனால் கடந்த சில தினங்களில் நானூற்றுக்கும் அதிகமான கோழிக் குஞ்சுகள் இறந்துள்ளன.

இது தொடர்பாக மற்றிகைக் கால்நடை வைத்திய அதிகாரிக்குப் புகார் செய்யப்பட்டுள்ளது.

[உ-70]

அம்பாள் ஆலய கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜன. 19

கீரிமலை வீதி, சித்தன் கேணி ஸ்ரீமுத்துமாரி அம்பாள் ஆலய உற்சவ மூர்த்தி கும்பாபிஷேகம் நாளை வெள்ளிக்கிழமை காலை 8 மணி முதல் 11 மணிவரையான சுப வேளையில் நடைபெறுகின்றது.

விழா நிகழ்ச்சிகள் சிவஸ்ரீ கு. வல்லவேஸ்வரக் குருக்கள் ஆலய பிரதமகுரு வரதராஜக் குருக்கள் ஆகியோர் தலைமையில் நடைபெறும்.

இவ் விழாவில் இலங்கை, இந்திய, மலேசிய புகழ்மிகு தவில்–நாதஸ்வர கலைஞர்களும் இசை வழங்கவுள்ளனர். பிற்பகல் 4மணி அளவில் அம்பாள் பூந்தண்டிகையில் வீதியுலா வரும் காட்சியும் இடம் பெறும்.

(ஒ)

சிரமதானம்

தானையடி, ஜன. 19

பாடசாலை வாரத்தையொட்டி கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய ஆசிரியர்கள் ஜனவரி 10ஆம் திகதி சிரமதானப் பணியில் ஈடுபட்டார்கள்.

அவர்கள் வேலி அமைத்தல், பாடசாலை சுற்றுடலைச் சுத்தம் செய்தல் ஆகிய பணிகளை மேற்கொண்டனர்.

(இ-144)

பஜனை

யாழ்ப்பாணம், ஜன. 19

எதிர்வரும் 21 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை. 85/7, ஆனந்தன் வடலி வீதி, கொழும்புத்துறை என்ற முகவரியில் அமைந்துள்ள, பகவான் ஸ்ரீசத்திய சாயிபாபா பஜனை மண்டலி மண்டபத்தில், அகண்டநாம பஜனை நடைபெறும்.

(க)

அலுவலக இடம் மாற்றம்

அராலி, ஜன. 19

இதுவரை காலமும் யாழ்ப்பாணக் கல்லூரிக்கு அண்மையில் பிரதான பாதையில் அமைந்திருந்த வட்டுக்கோட்டை கால்நடை வைத்திய அதிகாரியின் அலுவலகம் பிரதான பாதையில் இருந்து சிறிதுதூரம் உட்புறக்கமாக ஒதுங்கி ஒரு தனியார் வீட்டுக்கு இடம் மாற்றப்பட்டுள்ளது.

(உ)

புனரமைப்பு

தானையடி, ஜன. 19

கிளிநொச்சி, பரந்தன் தபால் நிலையங்கள் புனரமைப்புச்செய்யப்பட்டுப் புதுப் பொலிவுடன் காட்சியளிக்கின்றன.

முன்பு இந்த இரண்டு தபால் நிலையங்களும் இராணுவத்தினரால் பாவிக்கப்பட்டுவந்தன.

(க- 144)

நல்வழிப்படுத்துவது பொதுமக்களின் கடமை

வளர்மதி விழாவில் உரை

கொக்குவில், ஜன. 19

"நாட்டிற்குத் தேவை நற்பிரஜைகள், நற்பிரஜைகளை உருவாக்குவதில் சனசமூக நிலையங்கள், பொதுப்பணி மன்றங்கள் ஆகியவற்றின் பங்கு அளப்பரியது".

— கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகத்தின் வெள்ளிவிழா நிகழ்ச்சியில் உரையாற்றிய மில்க்வைற் அதிபர் திரு. கனகராஜா இப்படித் தெரிவித்தார்.

நிலையப் போஷகரும் விழாக்குழுத் தலைவருமான திரு. சி. குகனேந்திரன் தலைமையில் வைபவம் நடைபெற்றது.

பிரதம விருந்தினராக நல்லூர் உதவி அரசாங்க அதிபர் திரு. கே. சண்முகநாதன் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட வட்டாரக் கல்வி அதிகாரி திரு. தி. தங்கராசா — 'பல கழகங்கள் ஆரம்பிக்கப்பட்டு, கலகங்கள் உருவாகிக்கலைக்கப்பட்ட நிலையில்உள்ளன. ஆனால் அவ்வாறன்றிக் கொக்குவில் வளர்மதி சனசமூக நிலையம் 25 வருடங்களாக அரிய சேவையாற்றி வருகிறது' என்றார்.

கழகத் தலைவர் திரு. பொ. விக்கினேஸ்வரன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

சிறுவர்களின் கலை நிகழ்ச்சியும், வளர்மதிக் கழக நாட்டியாலய மாணவிகளின் நடன நிகழ்ச்சியும் இடம்பெற்றன.

கொக்குவில் வளர்மதி முன்னேற்றக் கழகத்தின் வெள்ளிவிழாவை முன்னிட்டு வெள்ளிவிழாமலரொன்றும் வெளியிடப்பட்டது.

வெள்ளிவிழா முத்தமிழரங்கில் மூன்றாம்நாள் வெள்ளிவிழா நிறைவு நாளன்று பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஷப்ரூ, உதயன், சஞ்சீவி நிறுவனங்களின் நிர்வாக இயக்குநர் திரு. ஈ. சரவணபவன் மலரை வெளியிட்டார்.

முதற்பிரதியை கழகப் போஷகர் திரு கி.பொ. வேலாயுதபிள்ளை பெற்றுக்கொண்டார்.

கழகத்தின் பாலர் பாடசாலை ஆசிரியை சி. கமலராணி நன்றியுரை வழங்கினார்.

(உ-69)

சின்னஞ் சிறு விளம்பரம்

விற்பனைக்கு

புதிய டீபிறீசர் விற்பனைக்கு உண்டு. அதுடன் ஒரு சிஸில் [Sisil R 80]பிறிட்ஜும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி 95, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். (9013)

T.V Portable Video Tuner Battery Chager Radio Dinner Sets பாவித்த தளபாடங்கள் (ரங்கூன்தேக்கு) விற்பனைக்கு உண்டு. Mrs A. Rasiah Near 3rd Mile post K.K.S Road, Kokuvil. (9012)

பாவித்த தளபாடங்கள், கட்டில், மெத்தை, Ceiling Fan, செற்றிகிரைகள், மேசை, அலுமாரி, Baby Cot, Cutliry Set கினாவி வகைகள் Belling Cooker தேக்கு Showcase கண்ணாடிமேசை Hot Plate மற்றும் பல உடன் மலிவு விலையில் விற்பனைக்கு உண்டு. 343, பருத்தித்துறை வீதி. நல்லூர். அரசடிச்சந்தி அருகில். (9014)

Lister Air Cool Diesel Engine விற்பனைக்கு உண்டு. H.R-3H.P 41.25 தொடர்பு கொள்ளவும் Reshan Electrical Centre 440, Hospital Road, Jaffna. (8900)

தேவை

கோழிப் பண்ணையில் அனுபவ முள்ளவர்கள் தேவை. தொடர்பு: சீமாட்டி 122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (8899)

அரைக்கும் யந்திரங்களில் (கிறைண்டர்) வேலை செய்வதற்கு ஆட்கள் தேவை. நற்சான்றுப் பத்திரங்களுடன்வரவும். தொடர்பு: எஸ். சுப்பிரமணியம், &. கோ. 53, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் (C/1505)

கோழிக்குஞ்சு விநியோகம் Uplands Farm

(Dekalb) இன பிறவுன் பேட்டுக் குஞ்சு, பிறவுன் சேவல் குஞ்சு, கறுப்பு (பிலிமத்) புள்ளி சேவல் (Cobb) இன புருயிலர் குஞ்சு (28-1-89) சனிக்கிழமை விநியோகிக்கப்படும். சொன்று வெட்டப்பட்டது (மரெக்ஸ்) தடுப்பூசி போடப்பட்டது. முன்கூட்டியே பதிவு செய்க. இல 9, கந்தையா லேன், (குரா வத்தை றோட்டு) சுன்னாகம். (புகையிரத நிலையத்துக்கு அருகில்) [8877]

றேனியோ

தரமான றேனியோ பிரதிகளை தமிழ் ஆங்கிலம் சிறந்த முறையில் குறித்த தவணையில் பெற்றுக்கொள்ள நாட வேண்டிய இடம்: "ஷப்ரு" சேவைப்பிரிவு இல 19, 2ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (C/1272)

தமிழ், ஆங்கில தட்டச்சு வகுப்புகள் சிறந்த முறையில் குறித்த தவணையில் பெற்றுக் கொள்ளவும், எலக்ரோனிக் ரைப்பிங் மூலம் வெளி நாட்டுக் கடிதங்கள் BioDataபோன்றமுக்கிய பிரதிகள் கண்ணைக் கவரக்கூடிய ஆங்கில எழுத்துக்கள் மூலம் செய்து கொடுக்கப்படும். "ஷப்ரு" சேவைப் பிரிவு இல. 19, 2ஆம் ஒழுங்கை,மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். (C/1271)

வகுப்புக்கள்

க. குணராசாவின் புவியியல் 1989 (Personal Class) மீட்டல் வகுப்பு 31-சனி. 3 - 4 படவேலை ஆரம்பமாகின்றது. A/L 1990 புதியவகுப்பு சனி 4- 5 ஆரம்பமாகின்றது. 82, பிறவுன் வீதி, நீராவியடி (8959)

தேவை

பல் வைத்திய தாதிப் பயிற்சி பெற விரும்பும் 25 வயதிற்குட்பட்ட பெண்கள் 31ஆம் திகதி காலை 10 மணிக்கு கல்விச் சான்றிதழ்களுடன் நேரில் வரவும். Dr நித்தியானந்தன், 163/1 மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். (8896)

A/L 89 இரசாயனம் 108BrownRoadஆசிரியர் சத்தீஸ் சனி, ஞாயிறு 12-30 - 2-30 p.m. Organic, Inorganic செவ்வாய், வியாழன் 6-30 - 8-30 a m Physical (வாயு விதிகள்) திங்கள், புதன், வெள்ளி 7-30 a-mவினு விடை. (9202)

தேவிபுரம் வீதி திருத்தம்

புதுக்குடியிருப்பு, ஜன.19

புதுக்குடியிருப்பு தேவிபுரம் வீதி திருத்த வேலைகள் தற்போது நடைபெற்றுவருகிறது.

தேவிபுரம் ஒரு குடியேற்றத் திட்டக் கிராமம். இந்தக்கிராமத்திற்கான மேற்படி வீதி நீண்ட காலமாக கவனிப்பாரற்று பற்றைகள் வளர்ந்து போக்குவரத்திற்குத் தகுதியற்றதாக இருந்தது.

இவ் வீதியின் திருத்த வேலைகள் தற்போது புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் விசேட ஆணையாளரும் உதவி அரசாங்க அதிபருமான திரு. அ. இராசரட்ணம் கவனித்துவருகிறார்.

(உ126)

நல்லூர் பிரதேச சபை
நல்லூர் - கொக்குவில் உப அலுவலகங்கள்
சகல வியாபார, தொழிற்சாலை உரிமையாளர்களுக்கும்
விசேட அறிவித்தல்

1989ஆம் ஆண்டிற்குரிய வியாபார தொழிற்சாலை உரிமங்களை இதுவரை பெற்றுக்கொள்ளாதவர்கள், தயவுசெய்து உரிமங்களைக் காலதாமதமின்றிப் பெற்று எம்முடன் ஒத்துழைக்குமாறு வேண்டுகின்றோம். வியாபார உரிமங்களை/ வரிகளைப் பெறாதவர்கள் மீது சட்டபூர்வ நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன்.

கந்தையா — சண்முகநாதன்
விசேட ஆணையாளர்,
பிரதேச சபை, நல்லூர்.

நல்லூர் பிரதேச சபை,
திருநெல்வேலி.
01/ 01/ 1989. [C/ 1135]

நல்லூர் பிரதேச சபை
(நல்லூர், கொக்குவில் உப அலுவலகங்கள்)
1989-ஆம் ஆண்டுக்கான ஆதனவரி பற்றிய
அறிவித்தல்

1989-ஆம் ஆண்டுக்கான ஆதனவரி கடந்த வருடாந்த மதிப்பீட்டின்படி அறவிடப்படும். ஆதனவரி அறவீட்டு விகிதம் 10% விகிதமாகும். ஆண்டு முழுவதற்குரிய வரித் தொகையை ஜனவரி 31-ம் திகதிக்கு முன் செலுத்தும் வரியிறுப்பாளருக்கு 10% விகிதம் கழிவும் 1-ம், 2-ம், 3-ம், 4-ம் கந்தாயங்களுக்குரிய கட்டணத்தை முறையே ஜனவரி 31-ம், ஏப்ரல் 30-ம், ஜூலை 31-ம் அக்டோபர் 31-ம் திகதிக்கு முன் செலுத்துவோருக்கு 5% விகிதம் கழிவும் வழங்கப்படும்.

1-ம் கந்தாயவரி
மார்ச் 31-ம் திகதிக்கு முன்பும்,
2-ம் கந்தாயவரி
ஜூன் 31-ம் திகதிக்கு முன்பும்,
3-ம் கந்தாயவரி
செப்டம்பர் 30-ம் திகதிக்கு முன்பும்,
4-ம் கந்தாயவரி
டிசம்பர் 31-ம் திகதிக்கு முன்பும்
செலுத்தப்பட வேண்டும்

வரி செலுத்தத் தவறும் வரியிறுப்பாளர்களிடமிருந்து, வெற்று நிலங்கள் மீதும் வதிவிட வளவுகள் மீதும் வீத வரித்தொகை மீது பதினைந்து சதவீதமும் அத்துடன் வெற்று நிலங்களும் வதிவிட வளவுகளும் தவிர்ந்த ஏனைய ஆதனங்களின்மீது வீதவரித் தொகை மீது இருபது சதவீத விதிப்பனவொன்று எழுத்தாணை வழங்கலுக்கான செலவுத்தொகை அறவிடப்படும். எனவேவரியிறுப்பாளர்கள் நிலுவையின்றி உரிய காலங்களில் வரிப்பணத்தைச் செலுத்தி சபையுடன் ஒத்துழைக்குமாறு வேண்டப்படுகின்றார்கள்.

கந்தையா சண்முகநாதன்,
விசேட ஆணையாளர்,
பிரதேசசபை, நல்லூர்.

நல்லூர் பிரதேசசபை.
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
1-01-1989 (C/1136)

அராலி மாவத்தை
விளையாட்டுக் கழகம் நடாத்தும்
யாழ்/மாவட்ட ரீதியில் 7 பேர் கொண்ட
உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

அராலி மாவத்தை விளையாட்டுக் கழகத்தின் நூறுவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்/மாவட்ட ரீதியிலான 7 பேர் கொண்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியை நடாத்த உள்ளது.

இப்போட்டியில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் 28 - 01 - 89 சனிக்கிழமைக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளன.

போட்டிக்கான கட்டணம் ரூபா. 50/-

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரிகள் :

செயலாளர், அராலி தெற்கு, அராலி. [9015]
நதியா ஜுவல்லறி மாவத்தை வி. கழாம், ஸ்ரானலி வீதிச்சந்தி, இல.2 கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

NEW SCIENCE ACADEMY
B. M. C முன்பாக JAFFNA.
90 A/L
WEEKEND CLASS
புதிய பிரிவு
Physics — மணியம்
Chemistry — சத்தீஸ்
Botany — ஐங்கரநேசன்
Zoology — பிரபல ஆசிரியர்
Pure|App — வெங்கடேஸ்வேலாயுதம்
ஆரம்பம்:- 21-01-89
Sat 7.30 A.m
(C/1517)

யாழ் - கொழும்பு
விமான சேவை

பலாலிக்கு விசேட போக்குவரத்து வசதியுடன் 18ஆம் திகதி புதன்கிழமை முதல் தினசரி நடைபெறுகின்றது. ஆசனங்களை முன்கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள். Telex|, Messages, கடிதங்கள், சிறு பொதிகள் [விமானம் மூலம்] அனுப்பப்படும்.

MACK TRAVELS
PRIVATE LIMITED
8, First Lane,
Pt. Pedro Road,
Jaffna.
[C/ 1516]

சாக்கு விற்பனை

சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கத்தில் 5,100 வெற்றுச்சாக்குகளை விற்பனை செய்வதற்குக் கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன. கொள்வனவு செய்ய விரும்புவோர் சங்கத்தில் வைப்புப்பணம் ரூபா 300/-உம், கேள்விப்பத்திரப்பணம் ரூபா 12/50 உம் செலுத்திப் பெற்ற கேள்விப்பத்திரங்களில் மெழுகு முத்திரையிட்ட கடித உறையில் "சாக்குக் கேள்விப்பத்திரம்" என எழுதி 25-1-89 புதன்கிழமை பிற்பகல் 1-30 மணிக்குமுன் கிடைக்கக்கூடியதாகச் சமர்ப்பிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பொது முகாமையாளர்
சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம்
சாவகச்சேரி,
17-1-89. (C/1510)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவை

தாதிகள் / மருத்துவ மாது

எமது மருத்துவ மனைக்கு பயிற்றப்பட்ட தாதிகளும், மருத்துவ மாதும் தேவை. இருப்பிடவசதியுண்டு.

தொடர்பு:-

Dr. P. சிவபாலன்
சந்நதி வைத்தியசாலை,
அச்சுவேலி
அல்லது
சந்நதியான் மருத்துவ நிலையம்,
உரும்பிராய்.

(9177)

ஏலவிற்பனை

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் கீழ்வரும் பொருட்கள் 1989 ஆம் ஆண்டு தை மாதம் 23 ஆம், 24 ஆம் திகதிகளில் முறையே பின் வரும் பிரிவுகளில் ஏலத்தில் விற்கப்படும்.

23 ஆம் திகதி சித்த மருத்துவத்துறை, கைதடி. காலை 10-00 மணி

23 ஆம் திகதி இராமநாதன், நுண்கலைத்துறை, மருதனமடம். காலை 11-00மணி

24 ஆம் திகதி மருத்துவபீடம் விஞ்ஞானபீடம் திருநெல்வேலி. காலை 10-00 மணி

ஏலத்தில் வெற்றி பெறுபவர் பொருட்களுக்கான முழுப் பணத்தையும் பல்கலைக் கழக காசாளரிடம் செலுத்தி பொருட்களை அனைத்தையும் அன்று மாலை 4-00 மணிக்கு முன்னதாக அப்புறப்படுத்த வேண்டும்.

(1) பெரிய கல்லு — சித்தமருத்துவத்துறை
(2) தண்ணீர் தாங்கி — இராமநாதன் நுண்கலைப்பிரிவு
(3) தறித்த பனைமரம்— ,, ,,
(4) பெரிய கல்லு — ,, ,,
(5) தண்ணீர் தாங்கி — மருத்துவ பீடம்
(6) கட்டிட கழிவுப்பொருட்கள் — மருத்துவபீடம் / விஞ்ஞானபீடம்
(7) கூரைத்தகடுகள் — மருத்துவபீடம்

பிரதி பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.
(C/1345)

'M' Three Travel

பெருமையுடன் வழங்கும்

உடனடிப் பிரயாண ஒழுங்குகள்

சவுதி அரேபியா:-

(1) கணக்காளர் [Accoun'ant] - 900 SR
(2) பொறியியலாளர் [Civil Engineer] - 1500 SR
(3) பொறியியல் மேற்பார்வையாளர் [Civil Forman] - 800 SR
(4) கம்பி கட்டுபவர் [Steel Fixer] - 700 SR
(5) மேசன் [Mason] [35 Vacancies] - 700 SR
(6) தச்சுத் தொழிலாளர்கள் [Carpenters] [4 Vacancies] - 700 SR
(7) வாடகைக்கார் சாரதிகள் [Taxi Drivers] - 800 SR
(8) கனரக வாகன சாரதிகள் [H. V. Drivers] - 1100 SR
(சவுதி வாகன அனுமதிப் பத்திரம் உள்ளவர்கள் மட்டும்)
(9) கப்பல்தள வேலையாட்கள் [Deckmen] - 550 SR
(நீச்சல் தெரிந்தவர்களுக்கு முதலிடம் வழங்கப்படும்.)
(10) பராமரிப்பு தொழிலாளர் [Maintenance Cleaners]
(25 வயதிற்கு மேற்பட்டவர்கள் ஆங்கில அறிவுடன்)
(11) Cleaner - 50 Vacancies

✶ கடவுச்சீட்டு, BOND செய்து கொடுக்கப்படும்.
✶ எங்களிடம் புதுக்கடவுச்சீட்டு செய்பவர்கள், எங்கள் மூலம் வேலை வாய்ப்புப்பெற்றுச் செல்ல விரும்பினால் உடனடியாக விசா (VISA) செய்து கொடுக்கப்படும்.
✶ நம்பிக்கை
✶ நாணயம்

என்பவற்றிற்கு நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்:

'M' THREE TRAVEL

இவை எல்லாவற்றிற்கும் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

'இந்திரபவனம்' சோதி லேன், கல்லூரி வீதி, காங்கேசன்துறை.
1, 2ம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

(C/1346)

திருவாசக முற்றோதல் பூர்த்தி

கொடிகாமம், ஜன. 19

'இப்போதைய தலைமுறையோடு திருவாசக முற்றோதல் நின்று விடாமல் இது வாழையடிவாழையாகத் தொடர்ந்து நடைபெற இளைஞர்கள் ஊக்கம் காட்டவேண்டும்'.

சாவகச்சேரி திவ்விய ஜீவனசுகத்தின்சார்பில் ஏற்பாடான மார்கழி மாத திருவாசக முற்றோதல் மீசாலை சித்திர வேலாயுதசுவாமி கோவிலுடன் பூர்த்தியுற்றது.

மண்டப வேலைகள் துரிதம்

மானிப்பாய் ஜன. 19

உடுவில் குமரகோட்டம் முருகமூர்த்தி கோயில் முருகன் முன் மண்டபம், பிள்ளையார் முன் மண்டபம் அமைத்தல் வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன. (ச-90)

ஆதிமஜோதி ஆசிரியர் திரு. முத்தையா முடிவுரையில் மேற்கண்டவாறு கூறினார்.

தென்மராட்சி சைவ மகாசபையைச் சேர்ந்த சரசாலை உறுப்பினர்கள் அமோகமாகப் பங்குபற்றினர். (இ-75)

நாடக அரங்கக் களப் பயிற்சி

குருநகர் ஜன 19

நாடக அரங்க களப் பயிற்சியும் விரிவுரைகளும் பிரதி சனிக்கிழமைகளில் யாழ் பிரதான வீதி திருமறைக் கலாமன்றத்தில் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இம்மாதம் 22 ஆம் திகதி முதல் விரிவுரைகளும் நாடக அரங்கக் களப் பயிற்சிகளும் ஆரம்பித்து வைக்கப்பட இருப்பதாகப் பொதுச் செயலாளர் திரு வி. ஜே. கொன்ஸன்ரைன் தெரிவித்தார். (க-51(

கிளிநொச்சி மாவட்டத்தில்

பின்தங்கிய கிராம விவசாயிகளுக்கு இலவச உரம்

வட்டக்கச்சி ஜன 19

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பின்தங்கிய கிராம விவசாயிகளுக்கு இலவச உரம் வழங்க கெயர் ஸ்தாபனமும் கிளிநொச்சி அகதிகள் புனர்வாழ்வுக் கழகமும் முடிவு செய்துள்ளன.

இதற்காக கிளிநொச்சிக்கு ரீ. டீ. எம். உரம் ஏற்கனவே கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்தஉரம் ஏற்கனவே தெரிவு செய்யப்பட்ட கிராமங்களுக்கு வெகு விரைவில் அனுப்பி வைக்கப்படும் என்று கிளிநொச்சி அகதிகள் புனர்வாழ்வுக் கழகத் தலைவர் திரு. என். இராசலிங்கம் தெரிவித்தார். (ச-163)

கிளிநொச்சி ம.ம. வித்தியாலயத்தில்

மாணவருக்கு விடுதி வசதி விரைவில் கிடைக்கும்

தாளையடி, ஜன 19

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தில் மாணவர்களுக்கு விரைவில் விடுதி வசதிகள் செய்யப்படவுள்ளன.

கிளிநொச்சி மாவட்ட கிராமப் புறங்களிலுள்ள மாணவர்கள் சிரமமின்றி தங்கியிருந்து உயர்தர வகுப்புக்களில் கல்வி கற்கும் முகமாகவே இவ்வசதி ஏற்படுத்தப்படவிருப்பதாக கிளிநொச்சி கொத்தணி அதிபர் திரு. என். சோதிநாதன் தெரிவித்தார். (ஒ-144)

யாழ். பாடசாலைகளின்

அபிவிருத்திச் சங்கங்களை மீளமைக்க உத்தரவு

யாழ்ப்பாணம், ஜன 19

பாடசாலை அபிவிருத்திச் சங்கங்களின் வருடாந்தப் பொதுக்கூட்டங்களை உடனடியாகக் கூட்டி புதிய நிர்வாக சபை பற்றிய விபரங்களை இந்த மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் கல்வித் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும்.

நேற்று முன்தினம் யாழ் கல்வித் திணைக்களத்தில் நடைபெற்ற கொத்தணி அதிபர்கள் மற்றும் கல்வி அதிகாரிகளுக்கான கூட்டத்தில் இந்த அறிவுறுத்தல் விடுவிக்கப்பட்டது.

பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள் பாடசாலையின் விருத்திகரமாகக் கருத்தில் கொண்டே செயற்படவேண்டும். இதற்கு அடிப்படையாக பாடசாலைகளின் அபிவிருத்திச் சங்கங்களின் நிர்வாக சபைகள் நடப்பு ஆண்டிற்காக தெரிவு செய்யப்பட்டு அதன் விவரம் கொத்தணி அதிபர்கள் ஊடாக கல்வித் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படவேண்டும்

இவ்வாறு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது (உ-5)

அனுதாபம் தெரிவித்து தீர்மானம்

கன்னாகம், ஜன. 19

'கடந்த ஒரு தசாப்தத்துக்கு மேலாக சமூக சேவையாளராக மட்டுமல்லாமல்சிறந்தகூட்டுறவாளராகவும் திகழ்ந்த ஈவினை - புன்னாலைக்கட்டுவன் வே செல்லையா அவர்களின் மரணம் எமது மக்களுக்குப்பேரிழப்பாகும்'.

கன்னாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்க இயக்குநர் சபை, மலாயன் பென்ஷனியரும்,மேற்படி சங்க இயக்குநர் சபை அங்கத்தவருமான திரு. செல்லையாவின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து மேற்கண்டவாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (இ-27)

இடமாற்றம்

பச்சிலைப்பள்ளி, ஜன 19

முழங்காவில் மருத்துவமனையில் பதிவு பெற்ற வைத்தியராகக் கடமையாற்றிய டாக்டர் ச. அம்பிகைபாகன் பனை. அரசினர் வைத்தியசாலைக்கு ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் யாழ் கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (ச-11)

நூலகர்

முல்லைத்தீவு பொது நூல் நிலையத்தில் உதவி நூலகராகக் கடமை புரிந்த திரு. யோசேப் பாக்கியராஜா முல்லியவளை நூல் நிலைய நூலகராகப் பதவி ஏற்றுள்ளார். [இ-92]

குடியிருப்புக்களை பார்த்தனர்

வடமராட்சி, ஜன. 19

இராணுவம் இருந்த தமது குடியிருப்புக்களை வல்வைவாசிகள் சென்று பார்வையிட்டனர்.

கல்லூரி வீதி இருந்தப்பட்டதே இதற்குக் காரணம். (ஒ-140)

பி. வி. சி. குழாய்கள் வாங்கும்போது
S-Lon எஸ் லோன் என்று கேட்டு
பார்த்து, உறுதிப்படுத்தி வாங்குங்கள்

உறுதிக்கும் நீண்டகாலப் பாவிப்புக்கும்
உகந்த பி.வி.சி. குழாய்கள் எஸ் லோன் குழாய்களே
மின்னுவதெல்லாம் பொன்னல்ல
எஸ் லோன் குழாய்களின் தரத்திற்கு வேறெவையும் நிகரல்ல

S-Lon Lanka (Pvt) Ltd.
467, UNION PLACE, COLOMBO - 2. T'PHONE: 596206 — 93718 - 9

★ தரமான கலர்ப்படப் பிரதிகள் ★

அதிகுறைந்த கட்டணத்தில்
✶ மிகக் குறுகிய காலத்தில்

கலர்ப்படச் சுருள் கழுவுதல் முற்றிலும் இலவசம்

நவீன கம்பியூட்டர் இயந்திரத்தில் பிரதி செய்தல்
3 முதல் 5 நாட்களில் விநியோகம்

ஷப்ருவை நாடுங்கள்

ஷ ப் ரு
207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி எண்: 22078

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வனசெயல் பாதிப்புக்களினால்

வேலையிழந்த ஆசிரியர்களுக்கு மீண்டும் வேலை

யாழ்ப்பாணம், ஜன 19

நாட்டில் ஏற்பட்ட வன்செயல்கள் காரணமாக வேலைக்குத் திரும்பாத ஆசிரியர்கள் மீண்டும் வேலைக்கு அமர்த்தப்படுவார்கள்.

இது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி சம்பந்தப்பட்ட கல்விப் பணிப்பாளர்களைக் கல்வி அமைச்சு பணித்துள்ளது.

இவ்வாறு வேலையிழந்த ஆசிரியர்களைத் தத்மது பகுதிக் கல்விப்பணிப்பாளர்களுடன் தொடர்பு கொள்ளுமாறும் கோரப்பட்டுள்ளது

கல்வி அமைச்சினால் தமிழர் ஆசிரியர் சங்கத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதத்தில் இந்தத் தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1983 ஆம் ஆண்டின் பின்னர் அடிக்கடி ஏற்பட்டுவந்த சம்பவங்களால் பல ஆசிரியர்கள் தமது கடமைகளுக்குச் செல்லமுடியாததிலே ஏற்பட்டது.

இத்தகைய ஆசிரியர்கள் தங்கள் கடமைகளுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டதுதொடர்பான விவரங்களை உரிய ஆதாரங்களுடன்வெளிப்படுத்தவேண்டும்.

சம்பந்தப்பட்ட வருடத்தில் ஏதேனும் பயன்படுத்தப்படாத லீவுகள் இருந்தால் அவையும் — கடந்த இரண்டு வருடங்களில் பயன்படுத்தப்படாத லீவுகள் எவையும் இருந்தால் அவையும் —

வேலைக்குச் சமுகமளிக்காத நாட்களில் இருந்து கழிக்கப்படும்.

வேலைக்குச் சமுகம் கொடுக்காத மிஞ்சிய நாட்கள் சம்பளமற்ற லீவாகக் கணிக்கப்படும். — இவ்வாறு மேலும் தெரிவிக்கப்பட்டது (உ-5)

மீளாய்வுக்கு விண்ணப்பிக்க இறுதித் தினம்

மாலிப்பாய் ஜன 19

ஜீ. சீ. ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளை மீளாய்வு செய்வதற்கான இறுதி நாள் நாளை 20 ஆம் திகதியாகும்

பரீட்சைத் திணைக்களத்தினால் மீளாய்வுக்கான விண்ணப்பங்கள் தற்போது ஏற்றுக்கொள்ளப்பட்டு வருகின்றது; நாளை 20 ஆம் திகதிவரை விண்ணப்பங்களை அனுப்பலாம்என பரீட்சைஆணையாளர் அறிவித்துள்ளார்.

ஒரு பாடத்துக்கான மீளாய்வுக் கட்டணம் ஐம்பது ரூபாவாகும் இக்கட்டணங்கள் முத்திரைகளாக விண்ணப்பப் பத்திரத்தில் ஒட்டப்படவேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-90)

ரூபா 50 முத்திரை கிடைக்கும்

யாழ்ப்பாணம் ஜன 19

ஜி. சீ. ஈ. உயர்தர பரீட்சைக்கான மீளாய்வு விண்ணப்பங்களை அனுப்பும் மாணவர்களின் நன்மை கருதி சுன்னாகம் தபால் நிலையத்தில் ரூபா 50 முத்திரைகள் தருவிக்கப்பட்டுள்ளதாக சுன்னாகம் தபாலக அதிபர் அறிவித்துள்ளார். [உ-ச)

கோரிக்கை

நெடுந்தீவு ஜன 19

நெடுந்தீவுக்கென நிரந்தரஉதவி அரசாங்க அதிபர் ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்குமாறு நெடுந்தீவுமுன்னேற்றக் கழகம் யாழ் அரசாங்க அதிபரைக் கேட்டுள்ளது. (ச 111)

'இளைஞர்களும், கல்விமான்களும் கம்பியூட்டர் துறையில் ஆர்வம்'

குருநகர், ஜன 19

மேலை நாடுகளில் எந்தத்துறையை நோக்கினாலும் கம்பியூட்டர் மயமாகவே உள்ளது இதனால்தான் இளைஞர்களும் கல்விமான்களும் இக் கல்வியைப் பெற்றுப் பாண்டித்தியம் அடைய ஆர்வம் கொண்டுள்ளார்கள்.

கம்பியூட்டர்கள் இன்றைய விஞ்ஞானஉலகில் காலத்தின் தேவைக்கு அமைய உருவாக்கப்பட்டு வருகின்றன.

ஐ டி பி நிறுவன மாணவர் மன்றத்தின் 'கம்பியூட்டர்' கையெழுத்துப் பிரதியை வெளியிட்டு வைத்து உரை ஆற்றுகையில் யாழ் பல்கலைக் கழகத் தமிழ்த் துறை விரிவுரையாளர் க. நாகேஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த வியாழக்கிழமை நிறுவன விரிவுரை மண்டபத்தில் வெளியீட்டு வைபவம் நடைபெற்றது மாணவர் மன்றத் தலைவர் ஜஸ்ப். ஏ எம். நௌசாத் தலைமைவகித்தார்.

கையெழுத்துப் பிரதியின் இணை ஆசிரியர்கள் எஸ். ஸ்ரீகாந்தராசா, செல்வி ஜி மைதிலி ஆகியோரும், திருவாளர்கள் ரி சந்திரகுமார் என். விஜயன் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்கள். (க 51)

புதிய சபை

சுன்னாகம் ஜன 19

யாழ் கல்வித் திணைக்களத்தில் பாடசாலைக் கட்டமைப்புச் சபை ஒன்று ஸ்தாபிக்கப்பட்டு செயற்பட்டுவருகின்றது.

புதிய பாடசாலையை ஆரம்பித்தல், பாடசாலையைப் புனரமைத்தல், பாடசாலையத் தரம் உயர்த்தல், புதிய வகுப்புகளை ஆரம்பித்தல், பாடசாலைகளுக்குப் பெயரிடுதல், காணி கவிரித்தல் ஆகிய விடயங்களை இச்சபை கவனிக்கும் (ச - 27)

பனை ஓலைப் பூக்கள் வெளிநாடுகளுக்கு!

சாவகச்சேரி, ஜன. 19

பனை ஓலையில் தயாரிக்கப்பட்ட அழகியபூக்களை அறவழிப் போராட்டக் குழு கவிட்ஸர்லாந்து, நெதர்லாந்து, பின்லாந்து, டென்மார்க் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்துள்ளது.

இக்குழுவின் செயற்திட்டங்களுக்கு நிதிசேகரிக்கும் பணிக்காகவே இப்பூக்களும் பொன் மொழிகள் அச்சிடப்பட்ட பனை ஓலைகளும் வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுவதாக குழுவின் செயலாளர் திரு. க. ஜீவகதாஸ் தெரிவித்தார்.

ஐரோப்பிய நாடுகளில் வாழ்கின்ற சமாதான விரும்பிகள் மத்தியில் இவ்வாறான தயாரிப்புக்களுக்கு நல்ல கிராக்கி இருந்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (உ-31)

யாழ். மாநகரசபை எல்லைக்குள் சட்டவிரோதமாக 24 இறைச்சிக் கடைகள்

குருநகர், ஜன 19

யாழ் மாநகர சபை எல்லைக்குள் அனுமதி பெற்றுஇயங்கும் 34 கடைகளுக்கு மேலதிகமாகச் சட்ட விரோதமான முறையில் 24 இறைச்சிக் கடைகள் இயங்குகின்றன.

யாழ் மாவட்ட மாட்டிறைச்சி வியாபாரிகள் சங்கம் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் இத் தகவல் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

சங்கத்தின்செயலாளர் திரு. க. சி. கிருஷ்ணன் இந்த அறிக்கையைவெளியிட்டிருக்கிறார்.

ஊர்காவற்றுறைப் பிரதேச சபை எந்தச் சட்டவிதிகளின் கீழ் சட்ட விரோதஇறைச்சிக்கடைகளை அகற்றுவதற்கு முனவந்துள்ளதோ. அதேசட்ட விதிச் செயற்பாடுகள் மூலம் யாழ் மாநகரசபை எல்லைக்குள் இயங்கிவரும் சட்ட விரோதஇறைச்சிக்கடைகள் அனைத்தையும்அகற்றுவதற்கு யாழ் மாநகர சபை நடவடிக்கைஎடுக்க வேண்டும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது [உ-51)

ஊரெழுவில் திருவாசக விழா மூன்று நாள் நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், ஜன 19

ஊரெழு சும்பன் கழக ஏற்பாட்டில் நாளைமுதல் மூன்று நாட்களுக்கு 'திருவாசக விழா, ஊரெழு ஸ்ரீ மீனாட்சி அம்மான் ஆலய முன்றலில் நடைபெறும்.

முதலாம் நாள் நிகழ்ச்சிகள் நாளை பிற்பகல் 2 மணிக்கு செல்வி தங்கமமா அப்பாக்குட்டி தலைமையில் ஆரம்பமாகும்.

கலாநிதி நா. சுப்பிரமணிய ஐயர் ''பெரிதும் சிறிதும்'' என்ற தலைப்பில உரையாற்றுவார்.

''திருவாசகத்தினூடு பெரிதும் வெளிப்படுவது மணிவாசகரின் பக்தியுணர்வே! கவித்துவமோ! கழிவிரக்கமே! ''என்ற தலைப்பில் நடைபெறும் மும்முனைப் பட்டி மண்டபத்திற்கு புலவர் ஈழத்துச் சிவானந்தன் நடுவராக இருப்பார்.

'பக்தியுணர்வே!' என திரு. மா வேதநாதன், திரு தி திருநந்தகுமார் ஆகியோரும் —

'கவித்துவமோ!' என திரு. எஸ் சிவலிங்கராஜா, திரு நா. தர்மராஜா ஆகியோரும் —

'கழிவிரக்கமே!' என திரு. க. நாகேஸ்வரன், திரு. ரி. சிவகுமாரன் ஆகியோரும் வாதிடுவர்

இரண்டாம் நாள் காலை நிகழ்ச்சிகள் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9 மணிக்கு கவிஞர் முருக. வே. பரமநாதன் தலைமையில் நடைபெறும்.

'அருளமுதக் கடலிலிலே ஆண்டாளும் வாசகரும்'' என்ற தலைப்பில் பேராசிரியர் அ சண்முகதாஸ் உரையாற்றுவார்.

''நான் கலந்து பாடுங்கால்.....'' என்ற தலைப்பில் நடைபெறும் கவியரங்கத்திற்கு கவிஞர் இ. முருகையன் தலைமை வகிப்பார்.

கவிஞர்கள் ச. வே. பஞ்சாட்சரம், ஜெ கி. ஜெயசீலன், நா. சிவசிதம்பரம், கல்வயல் வே. குமாரசுவாமி, நாவண்ணன். சாரை செ. சுந்தரம்பிள்ளை, க. பொ. பாலசிங்கம், சோ பத்மநாதன் ஆகியோர் இக் கவியரங்கில் பங்குபற்றுவர்.

இரண்டாம் நாள் மாலை நிகழ்ச்சிகள் சனிபிற்பகல் 2 மணிக்கு பண்டிதர் க. வீரகத்தி தலைமையில் நடைபெறும்

''வேண்டத் தக்க அறிவோய்நீ'' என்ற தலைப்பில் திரு. இ. ஜெயராஜ் உரையாற்றுவார்.

அடுத்து ''நாடகத்தால்உன் அடியார்போல் நடித்து'' என்ற தலைப்பில் சந்திப்பு நிகழ்ச்சி நடைபெறும்.

அப்பர், பாரதி, அருணகிரிநாதர், திருவள்ளுவர், கம்பன் ஆகியோரை மணிவாசகர் சந்திப்பது போல இந் நிகழ்ச்சி நடைபெறும்

கலாநிதி இ. பாலசுந்தரம் 'மணிவாசகராக' நிகழ்ச்சியில் பங்குபற்றுவார்.

'அப்பராக' புலவர் ஈழத்துச் சிவானந்தனும் பாரதியாக கவிஞர் இ. முருகையனும், அருணகிரிநாதராக திரு சோ. பத்மநாதனும், 'திருவள்ளுவராக' கலாநிதி அ. சண்முகதாஸும், 'கம்பனாக' வலிகாமம் கிழக்கு பிரமணிய ஐயரும் பங்குபற்றுவர்.

மூன்றாம் நாள் காலை நிகழ்ச்சிகள் ஞாயிறு காலை 9 மணிக்கு வித்துவான் சி. குமாரசுவாமி தலைமையில் நடைபெறும்.

திருமதி வஸந்தா வைத்தியநாதன் ''திருவாசகத்தில் தேன்'' என்ற தலைப்பில் உரையாற்றுவார்.

,'என்புருக்கும் வாசகத்தில் எமையுருக்கும் வாசகங்கள்'' என்ற தலைப்பில் வித்துவான் க. நவேலன் தலைமையில் கருத்தரங்கு நடைபெறும் இக்கருத்தாங்கில் திரு சோ. பத்மநாதன், திரு எஸ் சிவலிங்கராஜா, கலாநிதி அ. சண்முகதாஸ் திரு இ ஜெயராஜ் ஆகியோர் பங்குபற்றுவர்.

மூன்றாம் நாள் மாலை நிகழ்ச்சிகள் பி ப 2 மணிக்கு பேராசிரியர் கலாநிதி என். எம். சுவரி முத்து அடிகள் தலைமையில் நடைபெறும்.

''யார் கொலோ சதுரர்?'' என்ற தலைப்பில் புலவர் ஈழத்துச் சிவானந்தன் உரையாற்றுவார்.

அடுத்து முதலாம் நாள் நிகழ்ச்சியில் இடம்பெற்ற பட்டிமண்டப இர்ப்புத் தொடர்பாக மேன்முறையீட்டு பட்டிமண்டபம் இடம்பெறும்

நடுவர்களாக கலாநிதி அ. சண்முகதாஸ், வித்துவான் க. நவேலன் திருமதி வஸந்தா வைத்தியநாதன் ஆகியோர் பங்குபற்றுவர் கலாநிதி நா. சுப்பிரமணிய ஐயர், கவிஞர் சோ. பத்மநாதன் திரு இ. ஜெயராஜ் ஆகியோர் தமது கட்சிகளுக்காக வாதிடுவர்

வெள்ளி, சனி ஞாயிறு ஆகிய மூன்று தினங்களிலும் இரவு 7 மணி முதல் திருவாசக ஆய்வரங்கு இடம்பெறும்.

மூன்று நாள் ஆய்வரங்குகளுக்கு முறையே கலாநிதி சோ. இ. பாக்கியநாதன், திரு. க முகுலித் தம்பி, கலாநிதி இ பாலசுந்தரம் ஆகியோர் தலைமை வகிப்பர். இன்றும் திரு. சிவமகாலிங்கம் கவிஞர். இ முருகையன் திரு க. நாகேஸ்வரன் ஆகியோர் ஆய்வரங்கை தொடக்கி வைப்பர். [உ/

தையிட்டியில் ரூ.6 லட்சம்செலவில் மதுசார வடிசாலை

சாராய உற்பத்திக்குப் பாவிக்கப்படும் மதுசாரத்தை உற்பத்தி செய்யும் வடிசாலை ஒன்று 6 லட்சம் ரூபா செலவில் தையிட்டியில் அமைக்கப்பட உள்ளது.

தெல்லிப்பளை தெங்கு பனம் பொருள் உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச்சங்கம் இவ்வடிசாலையை இயங்க வைக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

இப்பகுதிகளில் கள்ளுச்சீசன் ஆரம்பித்ததும் மேலதிக கள்ளை விணாக ஊற்றாமல்' இவ்வடிசாலையில் மதுசாரத்தை உற்பத்தி செய்யக்கூடிய நிலை ஏற்படும் எனக் கூறப்படுகிறது. (ஒ-உ-6)

FIRST REMEMBRANCE

OF

Late Mr. S. KANAGASABAPATHY

(Retired Teacher at Jaffna College)

Birth : 15 5 1929 Death : 31-1-1988

திதி : 19-01-1989

எமது அன்பின் திருவுருவே!
தியாகத்தின் தீபமே!
எமது உயர்விற்கு ஊன்றுகோலாக இருந்த
எங்கள் அன்புத் தெய்வமே!
சிந்தை குளிர வந்து சிறப்பாகச்
சிரிக்க வைத்து,
விந்தைகள் பலகாட்டி எம்மை
மகிழ வைத்தீர்கள்,
இன்று இத்தரணியை விட்டு
எங்கு சென்றீர்கள்?
மின்னலல் முழங்காமல் திடீரென
எம்மை விட்டுப்
பிரிந்து ஆண்டொன்று சென்றதும்.
உங்கள் நினைவுகள் எங்கள் உள்ளங்களைவிட்டு
என்றுமே மறைவதில்லை.

உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சகோதரரும், குடும்பத்தினரும்

''Gowri'',
Inuvil West,
Chunnakam (9186)

31 ஆம் நாள் நினைவஞ்சலி

திருமதி

ரெபேக்கா பூரணம் தங்கராசா

தோற்றம் : 11 - 08 - 1904 மறைவு : 20 - 12 - 1988

எங்கள் இதயத்தில் என்றும் நீங்காது நிலைத்து நிற்கும் அன்புத் தாயே! எமக்கு நல்வழி காட்டி அன்பு, அறநெறி, பணிவு, பாசத்துடன் வளர்த்த தெய்வமே! எங்களைக் கண்ணீர்க் கடலில் ஆழ்த்திவிட்டு இறைவனோடு இறைவனாய் இணைந்து விட்டீர்களே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இயேசு பிரானைத் நினைமும் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்,

அருமை மக்கள், மருமக்கள்,

பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

'நிரேன் கொட்டோஜ்'
218/9, நாவலர் வீதி
யாழ்ப்பாணம் (9007)

வெற்றிடங்கள்

அரியாலை சனசமூக நிலையம் (புங்கங்குளம்) நடத்துவரும் பாலர் பாடசாலைக்கு பின்வருவோர் தேவைப்படுகின்றனர்,

1. பிரதம ஆசிரியை

க. பொ. த (சாதாரண) பரீட்சையில் சித்தியெய்தி இருப்பதுடன், அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் பாலர் பயிற்சி நெறியில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும். அத்துடன் கலை, விளையாட்டுத் துறைகளில் ஈடுபாடு விரும்பத்தக்கது.

சம்பளம் 400/- 5x40/- 600/-

2 உதவி ஆசிரியை

க. பொ. க (சாதாரண) பரீட்சையில் சித்தியுடன் பயிற்சிவலி அனுபவமும் கலை விளையாட்டில் ஈடுபாடும் விரும்பத்தக்கது.

சம்பளம் 350/- — 5x25/- — 375/-

விண்ணப்ப முடிவு திகதி: 31 - 01 - 1989

அனுப்ப வேண்டிய முகவரி:-

செயலாளர்
அரியாலை சனசமூக நிலையம்,
புங்கங்குளம்,
யாழ்ப்பாணம்.

(C/ 1134)

எபனி ரவல்ஸ்

எமது புது வருட நல்வாழ்த்துக்களுடன் ஓர் நற்செய்தி!

வெளிநாட்டிற்குச் செல்ல ஓர் அரிய சந்தர்ப்பம்

★ குவைற் (KUWAIT)

சுத்திகரிப்பாளர் (Cleaners) 35 KD
தொழிலாளர் (Labourers) 35 KD

சாப்பாடு இல்லை (without Meals)

உடனடியாக 400 பேர் செல்லலாம்.

வயதெல்லை 18 - 48 வரை

எமது குவைத் முகவரே நேர்முகப் பரீட்சையை கொழும்பில் நடத்துவார்.

(முற்பணம் அறவிடப்படமாட்டாது)

மேலும் விபரங்களுக்கு உடனடியாக நேரில் சந்தியுங்கள்:

EBANEE TRAVELS

29, நாயன்மார் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்.

(9172)

லியனாராச்சி கொலை வழக்கு:

3 பொலீஸ் அதிகாரிகளையும் ஜூரர்களின்றி விசாரிக்குக

பிரதம நீதியரசரிடம் விண்ணப்பம்

கொழும்பு, ஜ 19

சட்டத்தரணி லியனாராச்சி கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட மூன்று பொலீஸ் அதிகாரிகளும் ஜூரர்களின்றி மூன்று நீதிபதிகள் [ட்ரயல்-அற்-பார்] முன்னிலையில் விசாரிக்கப்பட வேண்டும் என்று பிரதமர் நீதியரசரிடம் விண்ணப்பம் செய்யப்படவிருக்கிறது.

மூன்று எதிரிகளும் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் ஆஜராகின்றனர் அப்போது எதிரிகளின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி லியன் விக்கிரமநாயக்கா நீதிபதி விமல் விக்கிரமசூரியாவிடம்[ட்ரயல்-அற்-பார்] விசாரணை கோரி விண்ணப்பிக்க இருப்பதாகத் தெரிவித்தார்.

பிணையில் விடப்பட்ட 3எதிரிகளும் இரகசியப் பொலீஸ் திணைக்களத்தின் இயக்குநரின் பொறுப்பில் விடப்பட்டனர்.

மேல்விசாரணை மார்க்கத்தில் [illegible] (ஒ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரத்த தானம் செய்வதால் எந்தவித தீமையும் ஏற்படமாட்டாது

விபத்துக்கள் காரணமாகவோ, பிள்ளைப் பேற்றின் பொழுதோ, சத்திரசிகிச்சையின் பொழுதோ அல்லது வேறு காரணங்களாலோ இரத்த இழப்பு ஏற்பட்டால் உயிரைக் காப்பாற்றுவதற்காக இரத்த இழப்பை ஈடுசெய்து கொண்டே மேற்கொண்டு வைத்தியம் செய்யப்படுகின்றது

இதைவிட பல காரணங்களாலும், முக்கியமாக மலேரியா நோயால் ஏற்படும் இரத்தச் சோகையை (Anaemia) நிவர்த்தி செய்வதற்கும் இரத்தம் ஏற்றுதல் அவசியமாகின்றது.

எமது வைத்தியசாலையில் சராசரியாக நாளொன்றுக்கு 25 – 30 பைந்து இரத்தம் தேவைப்படுகின்றது. இதைவிட ஏதாவது அசம்பாவிதங்கள் ஏற்பட்டால் ஒரு நாளைக்கு 50 - 60 பைந்து இரத்தமும் தேவைப்படுவதுமுண்டு.

இந்த இரத்தத்தை இரத்தம் தேவைப்படும் நோயாளிகளின் உறவினர்கள் இரத்த வங்கிக்குக் கொடுப்பதே சாலச் சிறந்ததாகும். கிட்டிய உறவினர்கள் இரத்தம் கொடுப்பதால் பல நன்மைகள் உண்டு. அரிதான இரத்த வகையுள்ள[உ-ம் நெகேட்டிவ் இரத்தப் பிரிவுகள்] நோயாளிகளுக்கு இரத்தம் தேவைப்படும் போது அவரின் கிட்டிய உறவினர்களிலேயே அவ்வகை இரத்தத்தைப் பெறமுடியும்

உறவினர்களாயின் அவர்கள் தமக்கு முன்பு ஏற்பட்ட நோய்களை மறைக்க மாட்டார்கள். எனவே பெரும்பாலும் நோயற்ற இரத்தம் பெறுவதற்கு வாய்ப்புண்டு

இரத்ததானம் செய்வதனால் ஒருவித தீங்கும் ஏற்படமாட்டாது குருதிக் கலங்கள் (Blood Cells) என்பு மச்சையிலிருந்து (BoneMarrow) உற்பத்தியாவதும் அழிவதும் ஒருவரின் வாழ்வில் தொடர்ச்சியாக நிகழ்ந்து கொண்டிருக்கின்றன

ஓர் செங்குருதிக்கலம் [Red Blood Cell) தோன்றி 120 நாட்களில் செயலிழந்து அழிந்து போகும். உடலிலிருந்து இரத்தம் பெறப்பட்டதும் எண்பு மச்சையின் துரித செயற்பாட்டால் புதிய இரத்தம் உற்பத்தியாகி சில நாட்களுக்குள் நிவர்த்தியாகிறது.

பரிசோதனைகள்

ஒருவர் இரத்தம் கொடுப்பதற்குத் தகுதியுடையவரா எனப் பல பரிசோதனைகள் செய்த பின்பே இரத்தம் பெறப்படுகின்றது. தகுதியற்றவரிடமிருந்து இரத்தம் பெறப்படமாட்டாது

ஒருவரின் நிறை அவரது இரத்தத்தின் தரம், (Haemoglobin% வீதம்) இரத்த அமுக்கம் (Blood Pressure) இருதயத் துடிப்பு ஆகியன கவனமாகப் பரிசோதிக்கப்படும்.

பயம் காரணமாகவே உறவினர்கள் இரத்ததானம் செய்ய முன்வருவதில்லை. இரத்ததானம் செய்வதால் ஒருவருக்குத் தீங்கு ஏற்பட இடமுண்டானால், வேறொருவரைத் தீமையிலிருந்து காப்பாற்றுவதற்காக ஏன் வைத்தியசாலையில் இதைச் செய்யவேண்டும்.

ஓர் உயிரை ஆபத்திலிருந்து காப்பாற்ற வேறொரு உயிரை ஆபத்திற்கு உள்ளாக்கும் செயல் ஒரு போதும் வைத்தியர்கள் செய்ய மாட்டார்கள். இதை உணர்ந்தால் பயம் ஏற்பட இடமில்லை.

உறவினர்கள் இரத்தம் வழங்குவதே சிறந்தது

இரத்தம் ஒருவருக்கு ஏற்றப்படுவதினால் பல தீமைகள் விளையலாம் என்பதைக் கவனத்தில் கொள்ளவேண்டும்: ஒருவருக்கு உயிர் ஆபத்து என்றால் மாத்திரமே இரத்தம் ஏற்றப்படும். இரத்தத்தில் எத்தனையோ நோய்க்கிருமிகள் இருக்கலாம் இரத்தத்தை ஏற்றுவதனால் இந்நோய்கள் பரவுகின்றன. எல்லா நோயாளிகளுக்கும் சோதனை செய்த பின்பே இரத்தம் ஏற்றப்படுகின்றது என மக்களிடையில் ஓர் தப்பபிப்பிராயம் நிலவுகின்றது மலேரியா (Malaria) மேகநோய் (Syphilis செங்குமாரி 'பி' Hepatitis B ஆகிய மூன்று நோய்களுக்கான சோதனைகளைச் செய்யவே எமக்கு இங்கு கருவிகள் உண்டு

செங்குமாரி B எனப்படுவது செங்குமாரி நோயைக் கொடுக்கும் வைரசுக்களுள். B வகையாகி ஏற்படும் நோயையே குறிக்கின்றது. மேலும் A வகை வைரசுக்களால் ஏற்படும் செங்குமாரியைத் தவிர A யோ B யோ அல்லாத வைரசுக்களால் [non A, nonB Viruses) ஏற்படும் செங்குமாரி நோயும் உண்டு (non A, non B Hepatitis கடந்த மாசமாதத்திலே தொடங்கப்பட்டசெங்குமாரி B வகைக்கான சோதனைமூலம் இற்றை வரை பத்திற்கு மேற்பட்டோர் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர் இரத்தம் ஏற்றுவதன் மூலம் ஏற்படும் செங்குமாரியில் 90 வீதம் non A non B Hepatitis வகையாகும்.

இது ஈரல் அழிவை ஏற்படுத்தக் கூடியது. (cirrhosis) Non A non B வைரசுக்கள் இரத்தத்தில் இருப்பதை அறிதற்கான கருவிகளோ பரிசோதனை முறைகளோ இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை.

இரத்தம் ஏற்றுவதன் மூலமும் பரவக்கூடிய 'எயிட்ஸ்' Aids – Acquired Immune Deficiency Syndrome). எனும் கொடிய நோய்க்கான பரிசோதனை இங்கு இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை,

மேலும் எயிட்ஸ் வைரசு தொற்றியபின் பரிசோதனைமூலம் கண்டுபிடிக்கக் கூடிய பிறபொருள் எதிரியை அவர் உண்டாக்க 3-6 மாதம் எடுப்பதனால் அதற்கு முன் அவர் இரத்ததானம் செய்தால் நோய் கண்டுபிடிக்கப்படாது இரத்தம் ஏற்றப்படுபவருக்கு இந்நோய் உண்டாகலாம்.

கூலிக்குப் பெறும் இரத்தமும் சிக்கல்களும்

இப்படியிருக்கும்போது நோயாளியின் உறவினர்கள் தாம் இரத்ததானம் செய்யாது யாரிடமாவது பணம் கொடுத்து இரத்தம் கொடுக்கச் செய்கிறார்கள் வாரட்டில் வைத்தியரால் "இரத்தம் உறவினரிடமிருந்து இரத்த வங்கிக்குக் கொடுக்கப்பட வேண்டும்" எனக் கூறும் துண்டை பணத்துடன் யாரிடமாவது கொடுத்தனுப்பி உறவினர் எனக் கூறச்செய்து இரத்தத்தைக் கொடுக்கச் செய்கிறார்கள்

பணத்திற்காக கொடுக்க வருபவர்கள் தம்மிடமிருந்து இரத்தம் எடுக்க மறுத்து விடுவார்கள் என்பதற்காக தமக்கு முன்னர் ஏற்பட்ட வியாதிகளை மறைத்து விடுவது வழக்கம். ஆகவே பரிசோதனைக்கு உட்படாத நோய்களைக் கொடுக்க அவர்கள் காரணிகளாக அமைகின்றனர்.

எயிட்ஸ் இப்போது பரிசோதனைக்கு உட்படாத ஒரு நோய் ஆகவே அதுவும் பரவ இடமுண்டு இரத்தம் கொடுக்க வருபவர் சில நோய்கள் ஏற்பட்டதா என்பதற்கு கூறும் பதில்களைப் பொறுத்து அவரின் தகுதியை நாம் நிர்ணயிக்கிறோம்,

கூலிக்கு வருபவர்கள் "ஒரு வருத்தமும் தமக்கு வந்ததில்லை" எனக் கூறி மறைப்பது தவிர்க்க முடியாததாகின்றது

இதன் காரணமாக நாம் உறவினர்கள் இரத்தம் கொடுக்கிறார்கள் என்பதை உறுதி செய்ய வேண்டியுள்ளது கூலிக்கு இரத்தம்பெறுவதனால் வேறு நோய்களையும் பெற்றுக்கொள்ளவாய்ப்புண்டு என்பதை மக்கள் இன்னும் உணராது இருக்கின்றனர்.

பிறரின் இரத்தத்தை ஏற்றுவதனால் தமக்கில்லாத நோய்களையும் பெற நேரிடும் என்பதை உணர்ந்த மேல்நாட்டு மக்கள் தேவைப்படும் அளவு இரத்தத்தை சத்திர சிகிச்சைக்கு முன்னரே சேமித்து வைத்து, சத்திர சிகிச்சையின் போது தாங்களே அதைப் பெற்றுக் கொள்கிறார்கள்

4-5 நாட்கள் இடைவெளியில் சத்திரசிகிச்சைத் தேவைக்கு ஏற்ற அளவு இரத்தம் அவர்களிடமிருந்து பெறப்பட்டு சேமிக்கப்படும்

இரும்புச்சத்து விளைகளை நாள்தோறும் பாவிப்பதனால் வேண்டிய இரத்தம் உடம்பில் உள்ளது என்பு மச்சையிலிருந்து உற்பத்தியாகிறது இப்படியாக தமக்குத் தேவைப்படும் இரத்தத்தைத் தாமே வழங்கி சிகிச்சை பெறுவதை 'ஒற்றலோகோசஸ் பிளட் டிரான்ஸ்பியூசன்,Autologous Blood transfusion) என்பர். இம்முறை தற்போது மேல்நாடுகளில் மிகவும் பிரபல்யமடைந்துள்ளது

இப்படியான காலத்தில் நம்மவர்கள் ஒரு பேரதம் தெரியாதவர்களின் இரத்தத்தைப் பெற்று அவர்களின் வேறு நோய்களையும் பெற முனைவது வருந்துவதற்கு உரியது மனிதர்களுக்கு மனிதனே, மனிதனுக்கு மனிதனையோ, பிள்ளைகளுக்குத் தாய் தந்தையரோ சகோதரருக்குச் சகோதரரோ இரத்தம் கொடுக்க மறுக்கின்றனர்.

சிறேற் பொஸ்பேற், டெக்ஸ்ரோஸ் அடெனின் (Citrate, Phosphate, Dextrose with adenine) ஆகியவற்றுடன் முழுமையான இரத்தத்தை (whole blood) 35 நாட்கள் அதற்கான குளிர்ப்பெட்டியில் Blood Bank Refrigerator) வைத்திருக்க முடியும். இந்த நடைமுறையையே இங்கு நாம் மேற்கொள்ளுகிறோம்.

இரத்த சேமிப்பு சாதனங்கள்

இரத்தத்தைப் பகுதிகளாகப் பிரித்து அதன் சில பகுதிகளை ஒரு வருடத்திற்கு கூடிய காலத்திற்கும் வைத்திருக்கக் கூடிய சாதனங்கள் உண்டு முழுமையான இரத்தத்தை ஒரு பொழுதும் இப்படியான நீண்ட காலத்திற்குச் சேமித்து வைக்க முடியாது

இரத்தத்தை அதன் பகுதிகளாகி நீண்ட காலத்திற்கு (1½ 2 வருடங்கள்) வைக்கக் கூடிய ஒரு சாதனத்தை எமது வைத்தியசாலை அழகுக்களைக் காப்பாற்றும் நிதியத்தின் Save the children fund) உதவியிலிருந்து பெற்றுக் கொண்டுள்ளது. இச் சாதனம் இரு கூறுகளைக் கொண்டது. பகுதிகளாக்கும் சாதனம் றெபிறிஜிரேட்டெட் சென்ரறிபியூஜ் Refrigerated Centrifuge என்றும், சேமித்து வைப்பது டீப்பிறிசர் deep freezer என்றும் அழைக்கப்படும்.

சில நேரங்களில் குணப்படுத்த இரத்தத்தின் குறிப்பான சில பகுதிகளே தேவைப்படுகின்றன அப் பகுதியைக் கொடுத்து விட்டால் முழுமையான இரத்தத்தைக் கொடுப்பதிலும் பார்க்க நோய் விரைவாகக் குணமடைகிறது அப்பகுதியைக் கொடுத்துவிட்டு மிகுதியை வேறு நோயாளருக்குக் கொடுக்க முடியும்.

உதாரணமாக சிலருக்கு ஹீமோபீலியா (Haemophilia) என்னும் இரத்தம் உறையும் தன்மையில்லாத வியாதி இருக்கிறது. அவர்களுக்கு ஒரு சிறு காயமேற்பட்டால் கூட அதவிலிருந்து இரத்தம் ஓடியபடியே இருக்கும் இவ்வியாதிக்கு இத்தனை காலமும் இருந்த முழுமையான உள்பெற இரத்தமே (Fresh blood) ஏற்றப்படுவதுண்டு

இதற்கு இரத்தத்தின் 'கிறையோ பிறெசிபிறேற்' (Cryo Precipitate) எனப்படும் ஒரு சிறு பகுதியை ஏற்றி விட்டால் விரைவாக இரத்தப் பெருக்கு நின்றுவிடும்.

ஒரு சிறு அளவிற்குப் பதிலாக நாம் 2 அல்லது 3 பைந்து முழுமையான உடன் பெற இரத்தத்தை ஏற்றுவதுண்டு. இச் சாதனங்கள் செயற்படத் தொடங்கியதும் எமது வங்கிக்கு இப்போது பெறப்படும் இரத்தத்திலும் பார்க்க இருமடங்கு இரத்தம் சேரித்ததாலே பகுதி பகுதியாகப் பிரித்து, சேகரித்து வைத்து தேவைப்படும் நேரத்தில் பாவிக்கக் கூடியதாக இருக்கும்

(மிகுதி நாளை)

டாக்டர் க. சுதாகரன்
(இரத்த வங்கி பொறுப்பதிகாரி
போதனா வைத்தியசாலை
யாழ்ப்பாணம்)

வைத்தியசாலைக்கு இரத்தம் வழங்க பொதுமக்கள் முன்வர வேண்டும்

நான்கு அணிகள் மோதும் தமிழக தேர்தல் களம்

ஜெயலலிதா

தமிழகச் சட்டமன்றத் தேர்தல் எதிர்வரும் 21ஆம் திகதி நடக்க இருக்கின்றது. இந்திராகாங்கிரஸ், தி. மு. க.: ஜெயலலிதா அ. தி. மு. க., ஜானகி அ. தி. மு. க என முக்கியமாக நான்கு அணிகள் போட்டியிடுகின்றன.

1967 வரை 20 ஆண்டுகள் காங்கிரஸ் ஆட்சி தமிழகத்திலிருந்தது. அண்ணாவின் அரசியல் பிரவேசம் தமிழகத்தில் 1967 தேர்தலில் தி. மு. க. வை ஆட்சிப்பீடமேற்றியது. பின் தி. மு. க. அதிலிருந்து பிரிந்து சென்ற அ. தி. மு. க. என்பன 1897 டிசம்பர் 24 வரை ஆட்சியில இருந்தன. அ. தி. மு. க. மூன்றாகப் பிரிந்து இத்தேர்தலில் போட்டியிடுகின்றது. 1967 இலிருந்து தி. மு. க. விலும், அ. தி. மு. க விலும் செல்வாக்குடன் திகழ்ந்து அமைச்சர் பதவியை வகித்த இரா நெடுஞ்செழியனும் தமது ஆதரவாளர்கள் சிலரை இத்தேர்தலுக்கு நிறுத்தியுள்ளார்.

இந்திரா காங்கிரஸ் தமிழக சட்டசபைத் தேர்தலில் 1967-இல் தோல்விகண்ட பின்னர் மாநிலக் கட்சிகளான தி. மு. க., அ. தி. மு. க. வுடன் தொகுதி உடன்பாடு கண்டே போட்டியிட்டது. இத்தேர்தலில் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடுகின்றது. அம்பேத்கார் கட்சிக்கும், முஸ்லிம் லீக்கின் அப்துல் ஸமது தலைமையிலான பிரிவுக்கும். வலது கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து பிரிந்த இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கும், காங்கிரஸ் சில தொகுதிகளை ஒதுக்கி அக்கட்சிகளின் ஆதரவைப் பெற்றுள்ளது.

ஜானகி அ. தி. மு. க. வுடன் தமிழர் முன்னேற்ற முன்னணி தேர்தல் உடன்பாடு கண்டிருக்கிறது. தி. மு. க. வுடன் எம். ஏ. லத்தீப் தலைமையிலான முஸ்லிம் லீக் பிரிவும். மாக்சலிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியும், கூட்டுச் சேர்ந்துள்ளன. ஜெயலலிதா அ. தி. மு. க வுடன் வலது கம்யூனிஸ்டும், ஜனதாக் கட்சியின் மாநில குழுவிலிருந்து பிரிந்த குழுவொன்றும் தொகுதி உடன்பாடு கொண்டிருக்கின்றன.

தமிழகத்தில் மொத்தம் 234 தொகுதிகளில் 3021 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றார்கள். இத்தேர்தலில் போட்டியிடும் முக்கிய கட்சிகளினதும் அவற்றுடன் சேர்ந்த தோழமைக் கட்சிகளதும் வேட்பாளர் எண்ணிக்கை 936 ஆகும் ஏனையோர் சுயேட்சை வேட்பாளர்களாவர்.

தனித்துப் போட்டியிட முன்வந்த இந்திராகாங்கிரஸ் முழுக்க முழுக்க இந்தியப் பிரதமர்ராஜீவ் காந்தியையே நம்பியிருக்கிறது. இந்திரா காங்கிரஸ் தமிழகத் தலைவர் திரு. ஜி. கருப்பையா மூப்பனார் பாபநாசம் தொகுதியில் போட்டியிடுகிறார். இங்கு ஏனைய மூன்று கட்சிகளும் வேட்பாளர்களை நிறுத்தியுள்ளன. சுயேட்சைகளும் ஒருபுறம்...

எம். ஜி. ஆர். அனுதாப அலை இம்முறை பிரிந்து நிற்கிறது

தலைவர்கள் போட்டியிடும் தொகுதிகள்

தி. மு. க. தலைவர் கலைஞர் கருணாநிதி சென்னை துறைமுகம் தொகுதியில் போட்டியிடுகிறார். தேர்தலில்போட்டியிட்டபோதெல்லாம் வெற்றி பெற்றவர் கலைஞர் இவரையும் ஏனைய அணியினர் எதிர்த்து வேட்பாளர் நிறுத்தியுள்ளனர். கலைஞரை எதிர்த்து தேர்தலில் போட்டியிடுவதே தனது குறிக்கோளாகக் கொண்ட வீரப்பாக் கவுண்டர் இத்தொகுதியில் போட்டிக்கு நிற்கிறார்

மூப்பனார்

அ. தி. மு. க இரு அணித் தலைவர்களும் மதுரை மாநகர் தொகுதிகளில் போட்டிக்கு நிற்கிறார்கள். திருமதி ஜானகி இராமச்சந்திரன் எம். ஜி. ஆர். 1984இல் போட்டியிட்ட ஆண்டிப்பட்டித் தொகுதியில் போட்டியிடுகிறார். செல்வி ஜெயலலிதாவோ போடிநாயக்கனூரில் போட்டியிடுகிறார் இவரை எதிர்த்து வெண்ணிற ஆடை நிர்மலா ஜானகி அணிசார்பில் போட்டிக்கு நிற்கிறார்.

நால்வர் அணித் தலைவராக இருந்து பின்னர் தனித்து நின்று போட்டியிடும் இரா நெடுஞ்செழியன் மயிலாப்பூர் தொகுதியில் போட்டியிடுகிறார். இத்தொகுதியில் முக்கியமான சிலர் போட்டிக்கு நிற்கிறார்கள் முன்னாள் முதல்வர் பக்தவத்சலத்தின் மகள் சரோஜினி வரதப்பன் இந்திரா காங்கிரஸ் சார்பில் போட்டியிடுகிறார் தி. மு. க சார்பில் முன்னாள் சபாநாயகர் நா. சண்பதியும் இத்தொகுதியில் போட்டிக்கு நிற்கிறார்கள்.

இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் அப்துல் ஸமது வாணியம்பாடித் தொகுதியில் போட்டியிடுகிறார் பிளவுபட்ட முஸ்லிம் லீக் தலைவர் எம். ஏ. லத்தீப் சேப்பாக்கம் தொகுதியில் நிற்கிறார். தி. மு. க பொதுச் செயலாளர் அன்பழகன் அண்ணாநகர் தொகுதியிலும், முன்னாள் அமைச்சர் ஆர். எம். வீரப்பன் புதுக்கோட்டைத் தொகுதியிலும் டாக்டர் ஹண்டே திருவல்லிக்கேணித் தொகுதியிலும் கே. ஏ. கிருஷ்ணசாமி திண்டுக்கல் தொகுதியிலும், தேனித் தொகுதியிலும் போட்டியிடுகிறார்கள்.

கருணாநிதி

தி. மு. க வின் ஆரம்பகால ஆதரவாளரும் நடிகருமான எஸ். எஸ். இராஜேந்திரன் பொய்குளத்தில் போட்டியிடுகிறார். இவர் ஜெயலலிதா அணியின் சார்பில் நிற்கிறார்.

அ. தி. மு. க. [illegible] மகன் ராஜேந்திரகுமார், கலைஞர் கருணாநிதியின் மகன் மு. க ஸ்டாலினை எதிர்த்துப் போட்டியிடுகிறார். தி. மு. க வுக்கும் ஜெயலலிதா அ. தி. மு. க வுக்கும் இங்கு நேரடிப் போட்டி ஏற்பட்டுள்ளது

முன்னாள் முதல்வர் எம். ஜி. ஆரின் சகோதரர் சக்கரபாணியின் மகன் எம். ஜி. ஸி பிரபாகர் கோயம்புத்தூரில் சுயேட்சையாகப் போட்டியிடுகிறார்.

முன்னாள் அமைச்சர்களாக இருந்த பொன்னையன். பண்ருட்டி இராமச்சந்திரன் ஆகியோர் இத்தேர்தலில் போட்டியிடவில்லை.

தேர்தல் வாக்குறுதி

இம்முறை தமிழகத் தேர்தலில் அரிசி முதலிடம் பெறுகிறது ஜானகி அணி பதவிக்கு வந்தால் தம் ஒரு கிலோ அரிசி ஒரு ரூபாவுக்குத் தருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது ஜெயலலிதாவோ ஒரு கிலோ ஒரு ரூபா 75 காசு என வாக்குறுதி அளித்துள்ளார்

மறைந்த முதல்வர் தமிழகம் மலையை ஒழித்துக் கட்டினார் கலைஞர் மேலவைக்கு தெரிவானதாலேயே அதனை எம் ஜி ஆர் ஒழித்தாரென அப்போது பேசப்பட்டது: இன்றோ வாக்கு [illegible] கிரசும் தி. மு. க வும் தம் பதவிக்கு வந்தால் மேலவையை ஏற்படுத்த வோம் என உறுதியளித்துள்ளனர்.

எம். ஜி. ஆர். அனுதாப அலை தவிர்யாக ஒரு கட்சியுடன் இன்று நின்றாவிடவில்லை. ஜெயலலிதா அணியிலும், ஜானகி அணியிலும் சிலர் திகழுக்காடுகின்றது காங்கிரசோ ராஜீவின் செல்வாக்கை நம்பி இருக்கின்றது. தி. மு. க ஒன்றே தன்னொன்கையில் தனித்து நிற்கின்றது தமிழ் சட்டமன்றத் தேர்தலைத் தமிழீழ மக்ள் ஆதரவுடன் எதிர்பார்க்கிறார்கள் இந்த தேர்தலில் 1984 சமிழச் சட்டமன்றத் தேர்தல் முடிவு ஏனையோர் பெறுவதற்கு [illegible] எண்ணிப் பார்க்கலாம் [illegible]

ஜானகி அம்மாள்

கள் போட்டிபோடுகின்றன. தி. மு. க. 198 தொகுதிகளிலும் அதன் தோழமைக்கட்சிகள் 36 தொகுதிகளிலும் போட்டியிடுகின்றன. ஜெயலலிதா அ. தி. மு. க 196 தொகுதிகளிலும் தோழமைக்கட்சிகள் 38 தொகுதிகளிலும் போட்டியிடுகின்றன. ஜானகி அணி 176 தொகுதிகளிலும் தமிழர் முன்னேற்ற முன்னணி 50 தொகுதிகளிலும் ஏனைய தோழமைக்கட்சிகள் 81 தொகுதிகளிலும் போட்டியிடுகின்றன.

★

கட்சிகள்	போட்டியிடும் தொகுதிகள்	வெற்றி பெறுவோர்	பெற்ற வாக்குகள்
அ. தி. மு. க. அணி	159	133	50 44 872
காங்கிரஸ்	71	62	35 69 873
கா. கா. தே. கா.	4	2	1 20 704
தி. மு. க. அணி	198	24	63 96 5 8
மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட்	17	5	5 32 574
போர்வர்ட் பிளக்	03	1	93 31
இந்திய கம்யூனிஸ்ட்	16	2	5 32 575
ஜனதா	16	0	4 3 374
சுயேட்சை	990	2	14 35 894

இத்தேர்தலில் அ. தி. மு. க. அணி 37 [illegible] விதமான வாக்குகளும் தி. மு. க. அணிக்கு 2749 விதமான வாக்குகளும் கிடைக்கலாம்.

புத்தொளி

தேர்தல் விவரம்

இந்திரா காங்கிரஸ் 210 தொகுதிகளில் போட்டியிடுகிறது. ஏனைய தோழமைக்கட்சி [illegible] அதன் தோழமைக்கட்சி [illegible] மாநிலம் முழுவதும் தேர்தலில் ஒவ்வொரு கட்சியிலிருந்தும் போட்டிக்கு நிறுத்தப்ப[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவை

எமது நிறுவனத்திற்கு பியோன் ஒருவர் தேவை. 25 வயதிற்கு உட்பட்டவராகவும், யாழ் மாநகர எல்லைக்குள் வசிப்பவராகவும் இருப்பின் விரும்பத்தக்கது. தகுந்த நற்சாட்சிப் பத்திரங்களுடன் வெள்ளிக்கிழமை (20-1-89) காலை 10 மணிக்கு நேரில் வரவும்.

அஸ்ரன் இன்ஸ்ரிரியூட்,
166/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(C/1343)

வாசித்துவிட்டீர்களா ?

தமிழ், கலை, இலக்கிய மாத இதழ்

புத்தெழில்

தன் சிறந்த எழுத்தாளர்களின் படைப்புக்களுடன் திருமதி கோகிலா மகேந்திரன் எழுதும்,

"முதுகில் ஊருந் தம்பலப்பூச்சி"

தொடர் நாவலையுந் தாங்கி வந்த மாத புத்தெழில் வெளிவந்து விட்டது.

வாசிக்கத் தவறாதீர்கள்!

சகல புத்தகசாலைகளிலும் கிடைக்கும். [9184]

பதிவுப் புத்தகங்கள் காணாமற் போனதன் எதிரொலி:

காணி உறுதிகளில் மோசடி இடம்பெறலாம் என அச்சம்

யாழ்ப்பாணம், ஜன 19

கடந்த வருடம் இடம் பெற்ற அசம்பாவிதங்களின் போது யாழ் மாவட்ட காணிப் பதிவு அலுவலகத்திலிருந்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட காணிப்பதிவுப் புத்தகங்கள் காணாமல் போயிருப்பதன் காரணமாக காணி உறுதிகளில் பலவித சிக்கல்களும், மோசடிகளும் இடம்பெறலாம் என சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் அச்சம் தெரிவிக்கின்றன.

யாழ் மாவட்ட காணிப் பதிவு அலுவலகம் தற்போது இயங்காத நிலையில் இருப்பதன் காரணமாக காணி உறுதிகள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் பெருமளவில் அதிகரிக்கலாம் என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

சட்டவரைஞர் திணைக்களத்தின் ஆலோசனையுடன் காணாமல் போன உறுதிகளைக் கொண்ட புத்தகங்கள் சம்பந்தமான பிரச்சினைக்கு உடனடி மாற்றுத்தீர்வு மேற்கொள்ளப்படவேண்டுமென்று இங்குள்ள அதிகாரிகள் அப்போது அரசாங்கத்துக்கு சிபார்சு செய்தனர். (ஒ-ஐ-5)

மகஜர்

தற்போது செயற்படாது இருக்கும் உரும்பராய் தனியார் பெற்றோல் நிரப்பு நிலையத்தை இயங்க வைக்குமாறு கோரும் மகஜர் ஒன்றை இப் பகுதிப் பொது மக்கள் நோப்பாய் உதவி அரசாங்க அதிபருக்கு சமர்ப்பித்துள்ளனர்.

இவர்களுக்கும் சந்தர்ப்பம்

உற்பத்தித்திறன் வாய்ந்த தொழில் முயற்சிக்கான நிவாரணப் பணமான நாலாயிரம் ரூபாவைப் பெற்றுக் கொள்ள குருநகர் பகுதியில் மீனவர்கள் அல்லாதவர்களும் விண்ணப்பிக்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

குருநகர் மேற்குகிராம சேவையாளர் திரு. ரோமான் அன்ரனி யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபர் திரு. மாணிக்கவாசகரின் அனுசரணையுடன் மேற்படி நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார். (க-51)

அன்புவினயகர் ஆலயம்

வடமராட்சி, ஜன.19

பருத்தித்துறை மந்திகை ஆதார வைத்தியசாலை அன்பு வினயகர் ஆலயத்தின் 1989 ஆம் ஆண்டுக்கென புதிய நிர்வாகசபை உறுப்பினர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டார்கள்.

தலைவர்-டாக்டர் சி. கதிரவேற்பிள்ளை, உப தலைவர்:- டாக்டர் கே. இராசலிங்கம் செயலாளர்:-த.குழந்தைவடிவேல். பொருளாளர்-டாக்டர் எம். யோகேஸ்வரதேவன்

நிர்வாகசபை உறுப்பினர்கள் திருமதி வை.இராசையா, செல்வி ஆர்.வடிவாம்பிகை. வி.யோகேஸ்வரன். கே.பரமதாஸ். கே. தேவராசா. (க-160)

கருத்தரங்கு

அனலைதீவு ஜன 19

இருதய நோய்ப்பற்றிய சுகாதாரக் கருத்தரங்கு ஒன்று 16ஆம் திகதி நயினாதீவு மகாவித்தியாலயத்தில்பாடசாலை அதிபர் தலைமையில் நடைபெற்றது.

சுகாதாரப் பரிசோதகர் திரு. ஏ. செல்லையா டாக்டர் தி. திருநாவுக்கரசு ஆகியோர் கருத்துரை வழங்கினார்கள். (க-18)

ஓய்வு பெற்றார்

யாழ்ப்பாணம் ஜன 19

யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார காரியாலயத்தில் மேற்பார்வை சுகாதார பரிசோதகராக கடமையாற்றிய திரு. என். தங்கவேலாயுதம் சேவையில் இருந்து ஓய்வு பெற்றார். இப்பதவிக்கு தற்போது யாழ் பாடசாலைவைத்திய அதிகாரி காரியாலயத்தில் கடமையாற்றும் சுகாதார பரிசோதகர் திரு. கா. அரிநேசலிங்கம் நியமிக்கப்பட்டார். (க)

பதவி உயர்வு

சாவகச்சேரி, ஜன. 19

மட்டுவில் வடக்கு கமலாசினி தமிழ் வித்தியாலய அதிபர் திரு. க. குழந்தைவேலு 2ஆம் தர அதிபராகப் பதவி உயர்வு பெற்றுள்ளார். [இ-31]

வலிகாமம் கிழக்கு பிரதேச சபை

(நீர்வேலி. நோப்பாய், உரும்பிராய், புத்தூர், அச்சுவேலி)
உப அலுவலகங்கள்

1989 ஆம் ஆண்டுக்கான ஆதனவரி பற்றிய

அறிவித்தல்

1989 ஆம் ஆண்டிற்கான ஆதனவரி கடந்த வருடாந்த மதிப்பீட்டின் படி அறவிடப்படும். தற்போது அமுலிலுள்ள ஆதனவரி அறவீட்டு விகிதமே எதிர்வரும் ஆண்டும் மாற்றமின்றி அமுல் செய்யப்படும். ஆண்டு முழுவதற்குமுரிய வரித்தொகையை ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன் செலுத்துவோருக்கு 10% கழிவும் 1 ஆம், 2 ஆம், 3 ஆம், 4 ஆம் கந்தாயங்களுக்குரிய கட்டணத்தை முறையே ஜனவரி 31 உம், ஏப்ரல் 30 ஆம், ஜூலை 31 ஆம், அக்டோபர் 31 ஆம் திகதிக்கு முன் செலுத்துவோருக்கு 5% கழிவும் வழங்கப்படும்.

1 ஆம் கந்தாய வரி மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்பும்
2 ஆம் கந்தாய வரி ஜூன் 30 திகதிக்கு முன்பும்
3 ஆம் கந்தாய வரி செப்ரெம்பர் 30 ஆம் திகதிக்கு முன்பும்
4 ஆம் கந்தாய வரி டிசெம்பர் 31 ஆந் திகதிக்கு முன்பும்

செலுத்தப்படல் வேண்டும். செலுத்தத் தவறும் வரியிறுப்பாளர்கள் மீது குடியிருப்பு ஆதனமாயின் 15%மும் வியாபார நோக்கத்திற்காகப் பாவிக்கப்படும் ஆதனமாயின் 20%மும் பற்றாணைச் செலவாக அறவிடப்படும்.

ஆகவே வரியிறுப்பாளர்கள் நிலுவையின்றி உரிய காலங்களில் பணத்தைச் செலுத்தி சபையுடன் ஒத்துழைக்குமாறு பணிவண்புடன் வேண்டப்படுகிறார்கள்.

க. குலேந்திரா
விசேட ஆணையாளர்,
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை.

நீர்வேலி - 10 - 01 - 89 (C/1509)

WHEN YOU WANT TO OPEN THE RIGHT DOORS
IN SRI LANKA
REMEMBER

SHABRA

We have proved **S**tability
We have shown **H**onesty
We are very much **A**dvanced
We have the most **B**acking
We are so **R**eliable
Thats why we are on the move **A**head

For more details please contact:

Shabra Unico Finance Limited

207, Power House Road,
JAFFNA.

9-ஆம் ஆண்டு நினைவஞ்சலி

திருமதி இ. மீனாட்சிப்பிள்ளை
(மண்டைதீவு கிழக்கு, மண்டைதீவு)

மலர்வு: 19-04-1927 உதிர்வு: 18 01-1981

அம்மா அன்று
வறுமையை நீங்கள் ஏற்று
என்னை வழமாக வளர்த்திடவே
உங்கள் ஊனை உருக்கி
என் உடலை வளர்த்தீர்கள்
எத்தனை காவியங்கள்
உங்கள் கண்ணொளியில்
அத்தனையும் இன்று
அசைபோடுதென் மனமே!
...வாடா தம்பி என்று
வடிவாய் என்னை
அழகுபடுத்திப் போடா
பள்ளிக்கு என்பாய்!
பொறுப்பில்லாமல் யான் திரிவேன்
கூடாதடா தம்பி!
நீ கூடிக்கெடாதே என்பாய்!
அம்மாதானே என்று
அலட்சியமாய் இருந்து விட்டேன்
இன்றுதான் தெரியுதம்மா
நீங்கள் சும்மா அம்மா அல்ல;
ஒரு தெய்வம்தான் என்று
அடி தொழ வேண்டிய
என்னை உங்கள்
கண்ணொளி படைக்கும்
காவியம் பல
என் வாழ்வு, என் உயர்வு
என்பதை அப்போதே
கற்பனையில் கண்டீரோ?
யான் அறியேன்.
அம்மா உங்கள் ஆசியிலே
நான் நூறும் பெற்ற
நூதனமானவன்! பல பேறும்
பெற்ற பாக்கியவான்.
ஆனால்! கிடைக்கவில்லையே
எனக்கு, நீண்ட காலம்
சேவை செய்ய உங்களுக்கு!
பிறப்பென்று இன்னொன்று
உண்டானால் எனக்கு
மீண்டும் உங்கள் மகனாகும்
பாக்கியம் படைப்பாயா? தாயே!

அருமை மகன்

ஓம்! சாந்தி..! சாந்தி...!! சாந்தி...!!!
'மாங்கொல்லை'
சாவகச்சேரி. (9163)

ஸ்ரீ சச்சிதானந்தா என்டர் பிறைஸ்சஸ் சுவாமி குருபூசை

இடம்:- கைதடி சுவாமி ஆச்சிரமம்
காலம்:- 21 - 01 - 89 (புனர்பூசம்)

காலை பிரார்த்தனை 12 மணிக்கு விசேஷ அபிஷேகம் தொடர்ந்து மகேஸ்வர பூசை இடம் பெறும். அனைவரையும் அன்பாக அழைக்கின்றோம்.

பிரசுர அன்பளிப்பு
ஸ்ரீ சச்சிதானந்தா என்டர் பிறைஸ்சஸ்
ஆனந்த நகர்,
கைதடி. [C/1506]

31 ஆவது நினைவு நாள்

செல்வி. ஐழனு துரைராசா

தோற்றம்:- 20-08-1976 மறைவு:- 19 12-1988

பள்ளிப்பருவத்தைப்
பாதியிலே முடித்து விட்டு
யாராத இடம் போனாய்
பரிதவிக்கின்றோம் உனை எண்ணி
துள்ளித் துள்ளி நீ ஆடியவை பாடியவை
தூங்கவில்லை எம் மனதில்
துடிக்கின்றோம் உனை நினைத்து
கண்ணுங் கபடமில்லா
எம் குடும்பத்துஇனஞ் செல்வமே!
காற்றுடனே கலந்து விட்டாய்
கலங்குகின்றோம் உனைத் தேடி
அள்ளிக் கொஞ்ச எமக்கருகில்
நீ இல்லை. உன்
ஆத்ம சாந்திக்கு அழுதழுது
பிரார்த்திக்கின்றோம்.

"தவமஹால்" பெற்றோர்,
அல்வாய் தெற்கு, குடும்பத்தினர்,
அல்வாய். உறவினர்,
(9173)

45 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பிதழும்

பூ. பாஸ்கரமூர்த்தி (மூர்த்தி)

மண்ணில்:- 14-4-1944 விண்ணில்:- 5-12-1988

திதி:- 19-1 1989

அன்பின் திருவுருவாய்
அறிவின் சுடரொளியாய்
பாசத்தின் பிறப்பிடமாய்
சிரிப்பில் நிறைமதியாய்
குடும்பத்தின் ஒளி விளக்காய்
மகிழ்வோடு வாழ்ந்து
இடைநடுவில் எம்மை ஆறாத்துயரில்
ஆழ்த்தி விட்டகன்ற
எங்கள் அன்புத் தெய்வமே!
தங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

உடன்வந்துஉதவியவர்களுக்கும், அன்னாரின் இறுதிச் சடங்குகளில் கலந்து கொண்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் எமது கண்ணீர் கலந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்!
தாய், சகோதரர்கள், பிள்ளைகள்,
மருமக்கள்.
(9008)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்யாமொழி

குறள்:
உலகத்தார் உண்டென்பது இல்லெனின்யான் வையத்து
அலகையா வைக்கப் படும்.

பொருள்:
உலகத்தார் உண்டு என்று சொல்வதை இல்லை என்று கூறுகின்ற ஒருவன், உலகத்தில் காணப்படும் ஒரு பேயாகக் கருதி விலக்கப்படுவான்.

உதயன்

இலக்கை – அதிகாலை – அரசியலை

இல. 292/3 நாவலர் வீதி, தொலைபேசி 24805
யாழ்ப்பாணம். 22073
19. 1. 1989 த. பெ. இல 23

புஷ்வின் கவனத்துக்கு...!

இரசாயன ஆயுதங்களைப் பாவிப்பது பற்றிய விவகாரம் சர்வதேச அரங்கில் சூடு பிடித்து வருகிறது. பெரும் பிரச்சினையையும் கிளப்பி வருகிறது.

லிபியாவில் உள்ள தொழிற்சாலை ஒன்றை, அமெரிக்கா தாக்கலாம் என்ற அச்சத்தைத் தொடர்ந்து இரசாயன ஆயுதவிடயம் பலரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.

அமெரிக்கா குறிப்பிடும் ஆலை, மருந்துத் தொழிற்சாலை என்கிறது லிபியா. அந்த ஆலையை நிர்மாணிக்கத் தொழில் நுட்ப உதவி வழங்கிய மேற்கு ஜெர்மனியும் அது மருந்துத் தொழிற்சாலை என்றே கூறுகிறது.

ஆனால் அமெரிக்காவோ பிரஸ்தாப ஆலை, இரசாயன ஆயுத உற்பத்தித் தொழிற்சாலை தான் என்று வரிந்து கட்டிக் கொண்டு வாதாடுகிறது. சாதிக்கவும் பார்க்கிறது.

அது ஒரு புறமிருக்க, இரசாயன ஆயுத உற்பத்தி மவிந்த குலத்தை அச்சுறுத்தத் தொடங்கி உள்ளதே இப்போது கவலைக்குரிய விடயமாகும்.

போர்க்களத்தில் சாதாரண ஆயுதங்கள் பாவிக்கப்படும் போது, போரில் ஈடுபட்டுள்ள வீரர்களுக்கு மட்டுமே பாதிப்பு, அழிவும் உண்டு. யுத்தம் நடக்கும் பிரதேசத்தை அண்டிப் பொதுமக்கள் வாழ்ந்தால் மட்டும் அவர்களும் பாதிப்பு அடைகிறார்கள்.

ஆனால் இரசாயன ஆயுதங்கள் அப்படி அல்ல. போர்க்களத்தில் தூவப்படும் அல்லது ஊட்டப்படும் நச்சுப் பொருள் காற்றோடு காற்றாகக் கலந்து பல்லாயிரம் மைல் தொலைவில் வாழும் ஒன்றும் அறியா அப்பாவி மக்களைக் கொன்றொழித்து விடும்.

போர் இல்லாத அமைதியான உலகமே மனித வாழ்க்கையை நிம்மதியாக்கும். ஆனால் இப்போது நாட்டுக்கு நாடு போர் என்ற நிலைமை மட்டுமன்றி நாடுகளுக்குள்ளேயே போர் என்ற அவலமும் நீடித்து வருகிறது.

அதுவும் போதாது என்று இரசாயன ஆயுதங்கள் பாவிக்கப்படுவது என்னே கொடுமையிலும் கொடுமை!

இரசாயன ஆயுதங்களை யுத்தங்களின் போது பாவிக்கக் கூடாது என்று ஐக்கிய நாடுகள் சபையில் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. அங்கத்துவ நாடுகள் எல்லாம் அவற்றை ஏற்று நடக்க ஒப்புக் கொண்டன.

ஆனால் நடைமுறையில் 'உனக்கில்லையடி கண்ணே ஊருக்குத் தான் உபதேசம்' என்ற கொள்கையையே நாடுகள் பலவும் கைக்கொள்கின்றன.

வல்லரசு நாடுகள், மேற்கு நாடுகள் இரசாயன ஆயுதங்களை உற்பத்தி செய்கின்றன. எப்படியோ அவற்றைத் 'தள்ளிவிட' உரிய சந்தைகளையும் அவையே உருவாக்கிக் கொள்கின்றன.

அதன் விளைவு: மூன்றாம் உலக நாடுகளிலும் இரசாயன ஆயுதங்கள் குவிக்கப்படுகின்றன.

அண்மையில் பாரிஸில் நடைபெற்ற இரசாயன ஆயுதங்கள் சம்பந்தமான மாநாட்டில் பிரஸ்தாப ஆயுதங்களால் மனித குலத்துக்கு ஏற்படக்கூடிய விளைவுகள் குறித்து பரந்த அளவில் ஆராயப்பட்டது.

இரசாயன ஆயுத உற்பத்திக்குத் தடை விதிக்க வேண்டியதன் அவசியமும் மாநாட்டில் வலியுறுத்தப்பட்டது.

இரசாயன உற்பத்திக்குத் தடை விதிக்கும் ஒப்பந்தம் ஒன்றைச் செய்வதற்கு கால தாமதம் ஏற்பட்டாலும் கூட, தன்னிடம் உள்ள இரசாயன ஆயுத இருப்பை அழித்து விடப் போவதாக ரஷ்யா பாரிஸ் மாநாட்டில் அறிவித்தது. அதற்காக ரஷ்யாவை உலக மக்கள் சார்பில் பாராட்டுகின்றோம். போருக்கும் பிணக்குக்கும் பதில், அமைதியையும் சமாதானத்தையும் நோக்கி ரஷ்யா வீறுநடை போடுவது மகிழ்ச்சிக்கு உரியதாகும்.

இரசாயன ஆயுத உற்பத்தித் தடை விடயத்தில் அமெரிக்காவும் ரஷ்யாவைப் பின்பற்ற வேண்டும். நாளை பதவி ஏற்கும் அமெரிக்காவின் புதிய ஜனாதிபதி திரு. ஜோர்ஜ் புஷ், திரு. கோர்பச்சேவ் வழியைப் பின்பற்றுவாரா? உலக மக்கள் நலன் கருதி அவர் இதனைத் தமது முதற்கடமையாகச் செய்வாராயின் உலகம் அவரையும் பாராட்டும்.

ஆக்கிரமிக்கப்பட்ட

அரபு பிரதேசத்தில் அடக்குமுறையை தீவிரமாக்க இஸ்ரவேல் முடிவு

அமெரிக்கா, ஐ.நா கவலை

வாஷிங்டன் ஜன 18

கைப்பற்றப்பட்ட அரபுப் பிரதேசங்களில் பலஸ்தீனியர் நடத்தும் தாயகம் மீட்கும் கிளர்ச்சிய அடக்கஇராணுவ நடவடிக்கைகளைத் தீவிரமாக்குவது என்று இஸ்ரவேலிய அரசு தீர்மானித்திருக்கிறது.

இது குறித்து அமெரிக்காவும்ஐ.நா.வும்பலத்த கவலை தெரிவித்துள்ளன

பல சர்வதேச நாடுகளும் இஸ்ரவேலின் முடிவைக் கண்டித்து உள்ளன.

இஸ்ரவேலிய இராணுவத்தின் தாக்குதலுக்கு பலஸ்தீனிய இளைஞர்களும் யுவதிகளும் மரணமடைவது குறித்து அமெரிக்க வெளியுறவு அமைச்சு கவலை தெரிவித்துள்ளது.

மோதலை இஸ்ரவேலும் பலஸ்தீன விடுதலை இயக்கமும் உடனடியாக ஒரு முடிவுக்குக் கொண்டு வர வேண்டும். அமெரிக்க அரசு இரு தரப்பினருக்கும் வேண்டுகோள் விடுத்திருக்கிறது

ஐநாபொதுச் செயலாளர் பெரஸ்டி குயிலரும் கவலை தெரிவித்திருக்கிறார்.

இஸ்ரவேலினால் 1967 இல் நடந்த 6நாள் யுத்தத்தில் கைப்பற்றப்பட்ட மேற்குக்கரை காஸா ஆகிய பிரதேசங்களை மீட்க அங்கு வாழும் பலஸ்தீனியர்கள் தாயகம் மீட்கும் போராட்டத்தை 1987 டிசம்பரில் இருந்து தீவிரமாக நடத்தி வருகின்றனர்.

தாயக மீட்புப்போராட்டத்தில் இதுவரை 370 பலஸ்தீனியர் இஸ்ரவேல் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

பலஸ்தீனியரின் தாக்குதலில் 14 இஸ்ரவேலியத் துருப்புக்கள் உயிரிழந்தனர்.

இஸ்ரவேல் பிறப்பித்துள்ள புதிய அடக்குமுறைச்சட்டங்கள் வருமாறு;

★ சாதாரண இராணுவத்தினரும் பலஸ்தீனியர் மீது பிளாஸ்டிக் குண்டுகளைப் பாவித்து துப்பாக்கிப் பிரயோகம் செய்யலாம்.

★ இஸ்ரவேல் துருப்புக்கள் மீது கற்களை வீசும் பலஸ்தீனக் குழந்தைகளின் பெற்றோர்களைக் கைதுசெய்து தண்டிப்பது.

★ அப்பெற்றோர்களுக்குரிய வீடுகளைத் தரைமட்டமாக்குவது.

★ பெற்றோர்களுக்கு நீண்டகால சிறைத் தண்டனை வழங்குவது; பெருந்தொகைப் பணத்தை அபராதமாக விதிப்பது. (எ)

தொழிற் சங்கம் இயங்க போலந்து அரசு நிபந்தனை

வார்ஸோ ஜன 18

பிரபல தொழிற்சங்கத் தலைவர் வல்சே தலைமையான சொலிடாரிட்டி இயக்கத்துக்கு சட்டபூர்வ அனுமதி வழங்குவது என்று போலாந்துக் கம்யூனிஸ்ட்கட்சியின்மத்திய செயற்குழு இறுதி முடிவு எடுத்துள்ளது.

அது என்ன என்பது நேற்றுவரை உத்தியோகபூர்வமாக வெளியிடப்படவில்லை.

மத்திய செயற்குழுக் கூட்டத்தில் அனுமதி வழங்கும் விஷயம் காரசாரமாக விவாதிக்கப்பட்டது என்று பி.பி.சி அறிவித்தது.

வேலைநிறுத்தங்களை இடைநிறுத்தி வைக்கவும் வெளிநாடுகளில் இருந்து நிதி உதவிபெறுவதை நிறுத்தவும் முன்வந்தால் சொலிடாரிட்டி இயக்கத்தை சட்டரீதியாக செயல்பட அனுமதிக்கலாம் என்ற அபிப்பிராயமே அரசு வட்டாரங்களில் நிலவுகிறது.

இரண்டு ஆண்டுகாலம் இப்படிச் செயல் பட்டதன் பின்னரே, கட்டுப்பாடின்றி இயங்க அனுமதிப்பது என்று போலந்து அரசு கருதுகிறதாம் (எ)

அரசு உத்தரவை எதிர்த்து

லண்டன் பத்திரிகையாளர் வழக்குத் தொடர அனுமதி

லண்டன், ஜன 18

வடஅயர்லாந்துதீவிரவாதிகள் மற்றும் அவர்களின் ஆதரவாளர்களுடனான பேட்டிகளை ஒலிபரப்ப வானொலி நிலையங்களுக்கு விதிக்கப்பட்டதடை உத்தரவை எதிர்த்து நீதிமன்றத்தில் வாதாட லண்டன் மேல் நீதிமன்றம் பத்திரிகையாளர் குழு ஒன்றுக்கு அனுமதி வழங்கியது.

பிரிட்டிஷ் அரசின் சார்பில் உள்துறை அமைச்சர் டக்ளஸ் ஹோர்ட் இத்தடை உத்தரவை கடந்த அக்டோபரில் பிறப்பித்தார்.

தடை உத்தரவு ஒருதணிக்கையே. அரசு தனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்துக்கு மேலாகவே செயல்பட்டுள்ளது. இப்படி பத்திரிகையாளர் குழு, நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் தெரிவித்திருந்தது.

மனித உரிமை இயக்கமும் அரசின் உத்தரவை எதிர்த்துள்ளது. (எ)

சோவியத் ஆயுதங்களில் அமெரிக்கருக்கு பயிற்சி

வாஷிங்டன், ஜன 18

ஆயுதப் படையினருக்குப் பயிற்சி வழங்க சோவியத் யூனியனின் பழைய மிக் விமானங்கள் மற்றும் போர்க் கருவிகள் வெளிச்சந்தையில் மூன்றும் நபர் ஊடாக வாங்கியதாக அமெரிக்காவின் பென்டகன் அமைப்பு முதல் முறையாகஒப்புக்கொண்டது.

சோவியத் யூனியனின் போர்க்கருவிகளின் தொழில் நுட்பங்களை அறிந்து கொள்ளவே பழையன வாங்கப்பட்டன. என்று பென்டகன் மேலும் அறிவித்தது.

சர்வதேச ஆயுத விற்பனையாளர்கள் ஊடாக கொள்வனவு செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ)

மியாமி நகரில் நிற வேற்றுமை

மியாமி, ஜன 18

அமெரிக்காவில்மியாமி நகரில் கறுப்பு, வெள்ளை இனத்தவருக்குஇடையேயான மோதல் இரண்டாவது தினமாக நேற்றும் இடம்பெற்றது.

தீ வைப்பு, மற்றும் கொள்ளைச் செயல்களில் கறுப்பு இனத்தவர்கள் ஈடுபட்டனர் என்று கூறி பொலீஸார் கடும் பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுத்தனர்.

தடுத்தும் மோட்டார் சைக்கிளில் தொடர்ந்து சென்று கொண்டிருந்த கறுப்புஇனத்தவர் ஒருவரைப் பொலீஸார் சுட்டுக்கொன்றனர். (எ)

உலகில்

ஆப்கனில் உணவு தட்டுப்பாடு காபூலில் கியூ வரிசை

காபூல், ஜன. 18

ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூலில் உணவுப் பொருள்களுக்கு பலத்த தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது.

சோவியத் யூனியனில் இருந்துலொறிகள் மூலம் உணவுப் பொருள்களைக் கொண்டு வருவது கெரில்லாக்களின் தீவிரத் தாக்குதலினால் சீர்கெட்டுள்ளது.

பல மணித்தியாலங்களாக கியூ வரிசையில் நின்றே உணவுப்பொருள்களைப் பெற வேண்டியிருப்பதாக ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன.

உணவுத் தட்டுப்பாட்டினால் குழந்தைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. (எ)

அமெரிக்காவில்

துப்பாக்கி நபர் வெறியாட்டம் ஐந்து அகதி மாணவர் பலி!

கலிபோர்ணியோ ஜன 18

துப்பாக்கி நபர் ஒருவரின் வெறியாட்டத்துக்கு ஐந்து பாடசாலை மாணவர்கள் பலியாகினர். 30 மாணவர்கள் படுகாயமடைந்தனர்.

உயிரிழந்தவர்கள் தென்கிழக்கு ஆசியநாடுகளைச் சேர்ந்த கம்பூச்சியா மற்றும் வியட்னாம் அகதி மாணவர் என்று தெரிவிக்கப்படுகிறது.

நேற்று இப்பயங்கரம் அமெரிக்காவில் வடகலிபோர்ணியோவில் இடம் பெற்றது

இது பற்றிய விவரமாவது:

இராணுவ வீரர் உடையணிந்த ஒருவர் கார் ஒன்றில் போய் கிளீவ்லந்து ஆரம்பப் பள்ளியின்முன்னால்இறங்கினார்.

அவர் குண்டு துளைக்காத சட்டையும் அணிந்திருந்தார். அவரின் கையில் ஏகே 47 தானியங்கித்துப்பாக்கி காணப்பட்டது.

பின்னர் தான் வந்த காருக்கு தீ வைத்தார். கார் எரிந்தது. அதன் பின்னர் பாடசாலைக்குள் புகுந்தார்.

நண்பகல். மாணவர்கள் பாடசாலை மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்தனர்.

அங்கு சென்ற நபர் மாணவரை நோக்கி ஏகே 47 ஆல் சுடத் தொடங்கினார்.

ரவைகள் முடியும் வரை சுட்டார் பின்னர் புதிதாக ரவைகளைப் போட்டு மீண்டும் சுடத் தொடங்கினார் சுமார் ஐம்பது சுற்றுக்கள் சுட்டார்.

விளையாடிக் கொண்டிருந்த மாணவர்கள் சிட்டுக்குருவிகள் போல் சுருண்டு விழுந்தனர்.

ஐந்து மாணவர் மைதானத்திலேயே பிணமானார்கள். இன்னும் 30 மாணவர் படுகாயமடைந்தனர்.

சுட்ட நபர் பின்னர் தனது தலையில் தானே சுட்டுதற்கொலை செய்து கொண்டார்.

தகவலறிந்து பொலீஸார் ஹெலிக்கொப்டரில் போய் இறங்கினர். காயமடைந்த மாணவரை அவசரமாக ஹெலிக்கொப்டரில் ஏற்றி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

சுட்டநபரிடம் இருந்து ஏகே 47 உடன் வேறு இரண்டு பிஸ்டல்களையும் மீட்டனர்.

சுட்டவர் பிரபல கிரிமினல் என்று அடையாளம் காணப்பட்டது. அவரின் பெயர் பட்ரிக் வெஸ்ட் வயது 24 அந்த நபர் ஏன் கிளீவ்லந்து ஆரம்ப பாடசாலையை தனது வெறித்தனத்துக்குத் தேர்ந்து எடுத்தார் என்பது புதிராக உள்ளது.

தென்கிழக்கு ஆசிய நாடுகளைச் சேர்ந்த அதி மாணவர்கள் பெரும்பாலோர் கிளீவ்லந்து பாடசாலையில் தன் கல்வியைக் கற்று வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது [எ]

புகைக்கும் சிறுவர்கள் பிரிட்டனில் அதிகரிப்பு

லண்டன், ஜன 18

சிகரெட் மீதான வரியை 16 சதவீதத்தினால் அதிகரிக்கும்படி பிரிட்டிஷ் வைத்தியக் கவுன்ஸில் நிதி அமைச்சரைக் கோரியுள்ளது.

புகைப்பதைத் தடுக்கும் நடவடிக்கையாக இதை அமுல் நடத்தும்படி வைத்தியக்கவுன்ஸில் வற்புறுத்தியுள்ளது.

1980 க்குப் பின்னர் பிரிட்டனில் புகைப்பிடிப்பது 2 சத வீதத்தினால் அதிகரித்துள்ளது.

பாடசாலை மாணவர்களில் 7, 8 மற்றும் 9 வயது மாணவர்களும் சிகரெட் புகைப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

15 - 18 இடைப்பட்டவர்களில் 20 சத வீதம் மாணவிகளும், 18 சத வீதம்மாணவர்களும் சிகரெட் புகைக்கின்றனர்.

இப்படிப் பிரிட்டிஷ் வைத்தியக் கவுன்ஸில் தெரிவித்திருக்கிறது. (எ)

வேகம்-விவேகம் உள்ள தி.மு.க. ஆட்சி வரும்

சென்னை, ஜன. 18

தி.மு.க. ஆட்சியில் வேகமும் விவேகமும் இருக்கும் என்றார் தி.மு.க தலைவர் கருணாநிதி.

பேட்டி ஒன்றில் அவர் மேலும் சொன்னதாவது;

முடங்கிக் கிடந்த நிர்வாகம் எமது ஆட்சியில் முடுக்கி விடப்படும்.

நிர்வாகத்தில் புரட்சிகரமான மாற்றத்தை ஏற்படுத்துவோம், ஆண்டான் - அடிமை என்ற நிலைமை இல்லாமல் அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டு, மத்திய அரசு ஒரு கூட்டாட்சி அமைப்பாகவும், மாநில அரசுகள் பூரண சுயாட்சி அமைப்பாகவும் விளங்க வேண்டும் என்பது எங்கருத்து.

இப்படி திரு. கருணாநிதி தெரிவித்தார்.

கண்டு பிடிப்பு

ஸ்கொட்லந்தில் அண்மையில்நொருங்கிவீழ்ந்த பான் அம் விமானத்தில் எந்த இடத்தில் குண்டு வைக்கப்பட்டது என்று கண்டு பிடிக்கப்பட்டு விட்டதாக அறிவிக்கப்படுகிறது.

அது பற்றிய மேலதிக விவரங்களை வெளியிட பிரிட்டிஷ் அதிகாரிகள் மறுத்து விட்டனர். (எ)

உதைபந்தாட்ட ரசிகர்களுக்கு அடையாளக் கார்ட்

பிரிட்டனில்

உதைபந்தாட்டப் போட்டிகளின் போது காடைத்தனம் இடம் பெறுவதைத் தவிர்க்க பிரிட்டன் சட்டம் ஒன்றைக் கொண்டு வரவுள்ளது. புதிய சட்ட மூலத்தை அரசு நேற்று வெளியிட்டது.

அதன்படி உதைபந்தாட்ட ஆதரவாளர்கள் அடையாளக் கார்ட் வைத்திருக்க வேண்டும்.

உதைபந்தாட்ட ரசிகர்கள் அனைவரும் அமைப்பு ஒன்றில் சேர வேண்டும். அந்த அமைப்பு ஒவ்வொருவருக்கும் அடையாளக் கார்ட் வழங்கும்

போட்டியைப் பார்வையிட மைதானத்துக்குச் செல்வோர், அடையாளக் கார்ட்டை தங்களுடன் எடுத்துச் செல்ல வேண்டும்.

காடைத்தனத்தில் ஈடுபடுவோரிடமிருந்து அடையாளக் கார்ட் பறிமுதல் செய்யப்படும்

புதிய சட்டம் பிரிட்டன் மற்றும் வேல்ஸிலும் அமுல் நடத்தப்படும். ஸ்கொட்லாந்தில் இது அமுல் நடத்தப்படமாட்டாது.

உதைபந்தாட்ட அதிகாரிகள், புதிய சட்ட மூலத்துக்கு கண்டனம் தெரிவித்துள்ளனர்.

நடைமுறைக்கு ஒவ்வாததுடன் செலவீனத்தை கொண்டுவரும் திட்டம் இது—

இப்படி அவர்கள் கண்டித்தனர். (எ)

மகனை முதலமைச்சராக்கத் துடிக்கிறார் கருணாநிதி! -ஜெயலலிதா குற்றச்சாட்டு

விழுப்புரம், ஜன.18

'மகன் ஸ்டாலினை முதல் அமைச்சராக்கப் பார்க்கிறார் கருணாநிதி. இதற்குத் தமிழக மக்கள் ஒருபோதும் தலை சாய்க்கக்கூடாது' என்று ஜெயலலிதா பொதுக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அப்போது அவர்கூறியதாவது:

கருணாநிதி தேசக்தி என்று புரட்சித் தலைவர் கூறினார். அந்தத் தீய சக்தியை எதிர்க்க அணியிலில் புரட்சித் தலைவர் உருவாக்கினார். இன்றைக்கும் ஊழலற்றஆட்சி அமைப்போம் என்று எல்லா அரசியல் கட்சியினரும் சொல்கிறார்கள். புரட்சித்தலைவர் வழிவந்த அ.தி.மு.க. தவிரவேறு யாருக்கும் அந்தத் தகுதி கிடையாது.

கருணாநிதி ஆட்சிக்கு வருவதற்கு நாட்டு மக்கள் சம்மதிக்கக்கூடாது. அவர் தன் மகன் ஸ்டாலினை முதல் அமைச்சராக்கப்பார்க்கிறார். தமிழ் [illegible] ஒருபோதும் [illegible] தலை சாய்க்கக்கூடாது. [illegible] அறிவித்தார். [illegible]

ராஜீவ் பேச்சு

நாமக்கல் ஜன 18

பிரதமர் ராஜீவ்காந்தி நேற்று நாமக்கல்லில் இந்திராகாங்கிரஸ் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசினார்.

நாமக்கல் கவிஞர்வழி நின்று தமிழும் தேசியமுமைப்பாட்டுக்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார். (எ)

இடமாற்றம்

சென்னை ஜன 18

இந்திரா காங்கிரஸுக்கு ஒத்துழைப்பு வழங்க மறுத்ததற்காக சென்னை டெலிவிஷன் நிலையச் செய்திஆசிரியர் கணேசன் [illegible] மாற்றப்பட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. [எ]

கூடாரம் மாறேன்; ராஜேந்தர் பதில்!

சென்னை, ஜன.18

'கொள்கையை விட்டு விட்டுக் கட்சி மாறமாட்டேன்' என்று சினிமா நடிகரும் டைரக்டருமான டி.ராஜேந்தர் கூறியுள்ளார்.

இதுகுறித்து டி.ராஜேந்தர்வெளியிடுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:

'பத்திரிகைகளில்நான் தேர்தல் பிரசாரத்திற்குச் செல்லவில்லை' என்று அறிக்கைவந்ததைப் பார்த்து சில விஷயி ள் நான் வேறு கட்சியைச் சார்ந்தவர்களுக்காகப் பிரசாரத்திற்கு வருவேன் என்பதுபோல கற்பனையில் கட்டுக்கதை திரித்துகொண்டிருக்கிறார்கள்.

என்னொருக்காரர் அல்ல. என் உடன் பிறந்த தம்பியே வேறு கட்சியில் நின்றால்கூட என் கொள்கை மாறி, கூடாரம் மாறி, கொடி தூக்கவும் மாட்டேன், கலை காட்டவும் மாட்டேன்.

நான் வழிமாறிச் செல்வதாவன் வேறு மரங்களின் நிழலைத்தேடிச் செல்வதாவன் வேறு கூடாரங்களோடு [illegible] குலவுவதாவன்

எமனே நேரில் வந்து என்னை வேறு கட்சிக்குப் [illegible]

தேவகௌடா இராஜினாமா

பெங்களூர், ஜன 18

கர்நாடக ஜனதா அமைச்சரவையில் மீண்டும் கருத்து வேறுபாடு ஏற்பட்டுள்ளது.

ஜனதா தன் கட்சியுடன் ஜனதா கட்சி இணைவதை விரும்பாத திரு தேவ கௌடா நேற்று வருவாய்த்துறை அமைச்சர் பதவியை இராஜினாமாச்செய்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேட்டிங் சூட்டிங்
* குழந்தைகளுக்கான ஆடைகள் சகலவிதமான
* றெடிமேட் ஆடைகளுக்கும்
சிறந்த இடம்
மயூரா சென்ரர்
13B, நவீனசந்தை. :-: யாழ்ப்பாணம்.

உதயன்
19 - 01 - 1989 வியாழக்கிழமை

திருமண வைபவங்களுக்கேற்ற
* பட்டுப் பிடவைகள்
* பட்டு வேஷ்டி சால்வைகள்
மற்றும்
இதர ஜவுளித் தெரிவுகளுக்கும்
மயூரா சென்ரர்
13B, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

மீளக்குடியமர்தல் நிவாரணம்:

3,036 குடும்பங்களின் பட்டியல் நேற்றுவெளியானது

சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஜன 19

மக்கள் வங்கிக் கிளைகளில் இந்த வார இறுதியில் மீளக் குடியமர்தல் நிவாரணம் பெற உள்ள 3 ஆயிரத்து 36 குடும்பங்களின் பட்டியல் நேற்று வெளியானது

21 ஆம் திகதி சனிக்கிழமை யாழ் பிரதான வீதி மக்கள் வங்கிக் கிளையில் நிவாரணம் பெறவிருக்கும் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த குடும்பங்களின் எண்ணிக்கை வருமாறு:-

* சரம்பன் -237
* சரம்பன் கிழக்கு - 66
★ சரம்பன் மேற்கு - 19
★ காரைநகர் தெற்கு - 303
★ ஊர்காவற்றுறை - 125

யாழ் ஸ்ரான்லி வீதி மக்கள் வங்கியில் 21 ஆம் திகதி சனிக்கிழமை நிவாரணம் பெறவிருக்கும் சங்கானை உ. அ. அ. பிரிவைச் சேர்ந்த குடும்பங்களின் எண்ணிக்கை வருமாறு:-

★ வட்டுக்கோட்டை மேற்கு - 168
★ மூளாய் - 308
* சங்கானை மேற்கு - 168
★ அராலி தெற்கு - 188

22 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மக்கள் வங்கி பிரதான வீதியில் நிவாரணம் பெற இருக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை வருமாறு:

★ மண்டைதீவு - 247
★ அராலி வடக்கு - 245
* பொன்னாலை - 328

சுன்னாகம் மக்கள் வங்கியில் இணுவிலைச் சேர்ந்த 634 குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கப்படும். (ஒ-10)

கரை ஒதுங்கிய டெலிவிஷன்கள்

காரைநகர் தாளையடி கடற்கரை பிரதேசத்தில் டெலிவிஷன்கள் மற்றும் எண்ணெய்ப் பீப்பாக்கள் போன்றன கரை ஒதுங்கின. (ஒ-73)

விடுமைப்பு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தலா 57 குடும்பங்களுக்கு குறையாமல் கடன் வழங்குவதற்கு மேற்படிஒவ்வொரு நகரசபைப் பிரிவுக்கும் 5லட்சத்து 50ஆயிரம் ரூபா வீதமும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. (உ-5)

அமைச்சரவை ..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ருக்கொண்ட பின்னர் சரியாகச் செயல்படத் தவறும் மாகாணசபைகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

அதுபோல மாகாண சபைகளுக்கு அதிகாரங்களை ஒப்படைக்கத் தவறும் மத்திய அமைச்சுகளின் செயலாளர்கள் மீதும் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

நிர்வாகக் கடமைகளில் இருந்து தவறும் மாகாண சபைகளோ, அமைச்சுச் செயலாளர்களோ தெரிவிக்கும் எக்காரணமும் ஜனாதிபதியால் ஏற்றுக்கொள்ளப் படமாட்டா.

— இப்படி ஜனாதிபதியின் பணிப்புரையில் கூறப்பட்டிருக்கிறது (உ-எ)

விராஜ் மென்டிஸ் நாடுகடத்தல்:

மறுபரிசீலனை செய்ய தாட்சருக்கு வேண்டுகோள்

லண்டன், ஜன18

இலங்கையரான விராஜ் மென்டிஸை நாடுகடத்துவது பற்றி மீண்டும் விசாரணை நடத்தும்படி பிரிட்டிஷ் பிரதமர் மார்கிரட் தாட்சருக்கு நூற்றுக்கு அதிகமான எதிர்க்கட்சி எம்.பிக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

விராஜ் மென்டிஸை இலங்கைக்கு நாடுகடத்தம் படி பிரிட்டிஷ் அரசு இரண்டாண்டுகளுக்கு முன்னர் உத்தரவிட்பட்டது.

அதைஎதிர்த்து விராஜ் மென்டிஸ் நீதிமன்றம் சென்றார். கடைசியாகக் கடந்த ஜூலைமாதம் அவரின் அப்பீல் நிராகரிக்கப்பட்டது. மேன்முறையீடு செய்யும் உரிமையும் அவருக்கு மறுக்கப்பட்டது.

தேவாலயம் ஒன்றில் தஞ்சமடைந்துள்ள மென்டிஸின்சார்பில் இப்போது இறுதி வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கிறது (உ-எ)

மினி பஸ்ஸின் போட்டியால் மீன் வியாபாரி பலி!

நுணாவில் சந்தியில் சம்பவம்

யாழ்ப்பாணம் ஜன.19

போட்டி போட்டுஓடிய இரண்டு மினிபஸ்களினால் அப்பாவி ஒருவர் அநியாயமாகப் பலியானார்.

நுணாவில் சந்தியில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலைஇச்சம்பவம் நடைபெற்றது.

மரணமானவர் கைதடியைச் சேர்ந்த மீன்வியாபாரி சின்னத்தம்பி சவுந்தரராசா [வயது38] இவர் ஆறுபிள்ளைகளின் தந்தை.

சம்பவ தினம் வியாபாரம் முடிந்து வீடு திரும்பிக் கொண்டிருக்கையில் வவுனியாவில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி வேகமாக வந்துகொண்டிருந்த மினிபஸ் ஸினால் மோதப்பட்டுமரணமானதாகக் கூறப்பட்டது.

இவரது மனைவி பிறப்பில் இருந்தே வாய்பேசாதவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ-10)

யாழ்ப்பாணத்திலிருந்து

திருமலை சென்ற பஸ் வழிமறிக்கப்பட்டு கொள்ளை

யாழ்ப்பாணம், ஜன 19

யாழ்ப்பாணத்தில் இருந்து திருமலை நோக்கிச் சென்று கொண்டிருந்த இ. போ. ச. பஸ் ஒன்று வவுனியாவுக்கும் ஹெப்பிட்டிகொல்லாவுக்கும் இடையில்கடந்த திங்கள் வழிமறிக்கப்பட்டது.

பிரயாணிகளிடமிருந்து பணம் மற்றும் உடைமைகள் கொள்ளையடிக்கப்பட்டன.

ஆறுவது மைலில்ஆயுதபாணிகள் பஸ்சை வழிமறித்தனர் சுமார்ஒருலட்சம்ரூபா பெறுமதியான நகைகள், பணம் கொள்ளையிடப்பட்டன என்று ஹெப்பிட்டிக்கொல்லாவ பொலீஸ் நிலையத்தில் முறையிடப்பட்டது. (ஒ-எ-10)

Obituary

Mrs. Hedwige Joseph

The death is announced of Mrs. Hedwige Joseph beloved wife of the late P. C. Joseph, mother of Anton, Rukmani and Ronald, mother in law of Lennie, Constantine and Candy, sister of late P. M Paulpillai and S. A. Manuelpillai, Funeral Thursday at 3-30 p. m. leaving residence No. 873, Hospital Road, Jaffna for interment at Mary's Burial ground Jaffna.

873, Hospital Rd. Jaffna. [9016]

Informant: L. Constantine

செய்திச் சாரம்

விபத்தில் 4பெண்கள் பலி!

சென்னை ஜன 19

மதுரை விமான நிலையம் அருகே நேற்று முன்தினம் இடம்பெற்ற லொறி — பஸ் மோதலில் 4 பெண்கள் உயிரிழந்தனர். 26 பேர் காயமடைந்தனர். (ஒ-எ)

பிரசாரம் முடிவு

சென்னை, ஜன 19

இன்றுடன் தமிழ்நாடு சட்டசபைத் தேர்தல் பிரசாரம் முடிவடைகின்றது.

வாக்களிப்பு நாளை மறுநாள் இடம்பெறும். வாக்குகள் எண்ணப்படுவது ஞாயிறு காலை ஆரம்பமாகும். (உ-எ)

தி.மு கவுக்கு வெற்றி!

சென்னை, ஜன. 19

கருத்துக்கணிப்பில் தமிழ்நாடு சட்டசபைத் தேர்தலில் தி மு கவே வெற்றியிட்டும் என்று வெளியாகியுள்ளது.

இப்படி பி.பி.சி.அறிவித்தது. (உ-எ)

அபி. சபை சட்டம் நீக்கம்

கொழும்பு, ஜன 19

1980 ஆம் ஆண்டின் மாவட்ட அபிவிருத்திச் சட்டத்தை நீக்கி விடுவது என்று அமைச்சரவை நேற்றுத் தீர்மானித்தது. (ஒ-எ)

காரைநகரில் தேடுதல்

காரைநகர், ஜன 19

இந்திய அமைதிப்படையினர் காரைநகர்ப் பகுதியில் செவ்வாயன்று பலதிக தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டனர் சில இளைஞர்கள் தேடுதலின் போது கைது செய்யப்பட்டனர். (உ-73)

மீன் பிடிக்க அனுமதி

குருநகர், ஜன 19

கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் குருநகர் இறங்குதுறை ஊடாகவும் மீன் பிடித்தலுக்கு அனுமதிக்கப்பட்டு வருகிறது.

குருநகர் இறங்குதுறை அமைதிப்படை முகாமில் அறிமுக அட்டை சமர்ப்பித்து 'பாஸ்' பெற்றுக்கொண்ட படகுகள் மாத்திரமே அவ்வாறு அனுமதிக்கப்படுவதாகத் தெரியவருகிறது. (ஒ-ச-51)

மின் விநியோகம் விஸ்தரிப்பு

கொடிகாமம், ஜன 19

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் உள்ள 23 வீதிகளுக்கு மின்சாரத்தை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

14 லட்சம் ரூபா செலவில் மேற்கொள்ளப்படும் இவ்விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ் ஏற்கனவே 16 வீதிகளுக்கு மின்சார விநியோகம் கிடைத்திருக்கிறது. (உ-ச-75)

திருமலை துறைமுகத்தில் குண்டு வெடிப்பு

இழுவைப் படகு சேதமுற்றது

திருகோணமலை, ஜன 19

நேற்று முன்தினம் நண்பகல் திருகோணமலை துறைமுகத்தில்வெடித்த குண்டு ஒன்றினால் இழுவைப் படகு ஒன்று பலத்த சேதமுற்றது.

கப்பலில் வேலை செய்யும் தொழிலாளர்களை கப்பலுக்கு ஏற்றியிறக்கும் இழுவைப் படகில் அநாதரவான பார்சல் ஒன்று கிடந்ததாகவும்- அதனைக் கண்ட படகு ஊழியர் அது குறித்து பொலீஸாருக்கு தகவல் தெரிவித்ததாகவும்-

பொலீஸாரின் பணிப்பின்படி அந்தப் பார்சலை கப்பல் ஊழியர்கள் கடலினுள் தூக்கிஎறிந்த போது அது பலத்த சத்தத்துடன் வெடித்ததாகவும் கூறப்பட்டது.

நீரினுள் குண்டு வெடித்ததில் பெருமளவு மீன்கள் இறந்து கடலில் மிதக்கத் தொடங்கின. (உ-150)

நிவாரணம் கோரி கிளிநொச்சியில் ஊர்வலம்

வட்டக்கச்சி, ஜன 19

முரசுமோட்டைப் பகுதியைச் சேர்ந்த ஐநூறுக்கும் மேற்பட்ட மக்கள் தமக்கும் நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து கடந்த செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி கச்சேரிக்கு ஊர்வலமாகச் சென்றனர்.

அவ்வேளை கச்சேரியில் அரச அதிபர் இல்லாததால் உதவி அரச அதிபர் திரு துரைராசா ஊர்வலத்தில் மக்கள் கொண்டுவந்த மகஜரைப் பெற்றுக்கொண்டார்.

வன்செயல்களால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் வெகுவிரைவில் நிவாரணம் வழங்கப்படும் என்று உதவி அரச அதிபர் அப்போது உறுதியளித்தார். (ஒ-163)

கன்னாதிட்டி, நவீன சந்தை வங்கிகளில் பணப் புழக்கம்

மாத இறுதிக்குள் ஆரம்பமாகும்

யாழ்ப்பாணம், ஜன 19

மக்கள் வங்கியை யாழ்ப்பாணம் கன்னாதிட்டி, நவீனசந்தை கிளைகளில் மீண்டும் பணப் புழக்கம் ஆரம்பிக்கப்பட இருக்கிறது:

இந்த மாத இறுதிக்குள் மேற்படி வங்கிகளில் பணக் கொடுப்பனவுகளை ஆரம்பிக்க மக்கள் வங்கி நிர்வாகம் துரிதமுயற்சியை மேற்கொண்டுள்ளது.

வட பிராந்தியத்தில் உள்ள மொத்தம் பதினாறு மக்கள் வங்கிக் கிளைகளில் ஒன்பது கிளைகளில் பணக் கொடுப்பனவுகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (ஒ-10)

இறுதிப்போட்டி 6 ஆம் திகதி

கரவெட்டி, ஜன 19

வடமராட்சி கொத்தணிப் பாடசாலைகளுக்கு இடையிலான இசை, நடன, நாடக இறுதிப் போட்டிகள் அடுத்த மாதம் 6 ஆம் திகதி வடஇந்துமகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

பார்வையாளர் அரங்கு நிர்மாணம்

மானிப்பாய், ஜன. 19

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு. சிவதாசனின் ஞாபகார்த்தமாக பார்வையாளர் அரங்கு ஒன்று நிறுவப்பட்டு வருகின்றது.

விளையாட்டு மைதானத்தில் இது அமைக்கப்பட்டு வருகின்றது. [ஒ-90]

அரச அதிபர்கள் மாநாடு

திருகோணமலை, ஜன. 19

கடந்த திங்கட்கிழமை வடக்கு, கிழக்குமாகாண முதலமைச்சர் திரு. அ. வரதராஜப் பெருமாள் வடக்கு, கிழக்கு அரசாங்க அதிபர்களை திருகோணமலைக்கு அழைத்து மாநாடு ஒன்றை நடத்தினார்

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா மன்னார், திருகோணமலை மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த அரச அதிபர்கள் இந்த மாநாட்டில் பங்கு பற்றினர்

வடக்கு, கிழக்கு பகுதியில் மேற்கொள்ளப்படவிருக்கும் புனர்வாழ்வுப் பணிகள் குறித்து இந்த மாநாட்டில் ஆராயப்பட்டது. (உ-150)

மாகாண..,

(1ம் பக்கத் தொடர்ச்சி)

குகளைக்கும் விகத்தில் நடக்கும் தனிநபர், மற்றும் குழுக்களைச் சேர்ந்தவர்களைக் கைது செய்து தடுப்புக் காவலில் வைத்தல்.

★ தனிநபர், மற்றும் குழுக்களைச் சேர்ந்தவர்களிடமிருந்து ஆயுதங்களைக் கைப்பற்றுவதற்கு அதிகாரிகளுக்கு உதவுதல்.

★ இயற்கை அழிவுகளின்போது நிவாரண வேலைகளில் ஈடுபடுதல்

— ஆகியன மக்கள் தொண்டர் படை உறுப்பினர்களின் கடமையாக இருக்கும்

இப்படை பொலீஸ் மா அதிபரின் தலைமையிலும் கட்டுப்பாட்டிலும் இயங்கும்.

மக்கள் தொண்டர் படைக்குத் தலைவர் ஒருவர் நியமிக்கப்படுவார்.

— இவ்வாறு தெரிவிக்கப்பட்டது. (உ-எ)

நட்புறவு... .

(1 ம் பக்கத்தொடர்ச்சி)

அனுசரித்து மேலும் சில பிரிவுகள் விலகக்பட லாம் என்றும் அவர் சொன்னார்.

இதனிடையில் இந்திய—இலங்கை ஒப்பந்தத்துக்குப் பதிலாக புதிய நட்புறவு உடன்பாடு ஒன்றும் கையெழுத்தாகும் என்று பி. பி. சி. அறிவித்தது. (உ-எ)

மரண அறிவித்தல்கள்

கந்தப்பு நாகலிங்கம்

கந்தப்பு நாகலிங்கம் 18 - 1 - 89 காலை காலமானார். இவர் யாழ். தொழில்நுட்பக் கல்லூரி முன்னாள் அதிபரும் மனோன்மணியின் அன்புக் கணவரும், ரஞ்சிதமணி, (ஆசிரியை ம. ம வித்தியாலயம் வசாவிளான்), திருமணி (U. S. A) ஆகியோரின் அன்புத் தந்தையும். சோமசுந்தரம் (பிரதிப் பணிப்பாளர், நிதி திட்டமிடல் அமைச்சு), கலாநிதி பஞ்சலிங்கம் (U. S. A) ஆகியோரின் மாமனாரும், முகுந்தன், வைகுந்தன் ஆகியோரின் பேரனுமாவார். ஈமக்கிரியைகள் அன்னாரின் உருமபராய் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக உரும்பராய் இளங்காடு மயானத்துக்கு 19-1-89 மாலை 4 மணியளவில் எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
திருமதி R. சோமசுந்தரம்.
"மனோ வாசா"
உரும்பராய். (9017)

திரு. துரைச்சாமி மகாலிங்கம்
(முன்னாள் கொழும்பு சிவா இன்டஸ்றீஸ் பங்காளர்)

புங்குடுதீவு 11 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த திரு. துரைச்சாமி மகாலிங்கம் 4-01-89 இல் ஜேர்மனியில் காலமாகிவிட்டார். அன்னார் துரைச்சாமி நாகமுத்து தம்பதியின் இரண்டாவது மகனும், தெய்வநாயகியின் அன்புக்கணவரும் மதுரா, இந்துஷா, சாளினி ஆகியோரின் அன்புத் தந்தையும் கொழும்பு ரோயல் இன்டஸ்றீஸ் உரிமையாளர் திரு. குருநாதசிவம், குணமணி தேவி, தவமணி தேவி (ஜேர்மனி) பரமலிங்கசிவம் (ஹொலண்ட்), யோகலிங்கசிவம் ஆகியோரின் சகோதரரும், சின்னையா, காலஞ்சென்ற விசாலாட்சி, நாகேசு, செங்கமலம் ஆகியோரின் பெருமகனும் நடராசா, சற்குணம், லக்ஷ்மிப்பிள்ளை, செல்லத்துரை ஆகியோரின் அன்பு மருமகனும் ஆவார் அன்னாரின் ஈமக்கிரியைகள் 13-01-1989 அன்று ஜேர்மனியில் நடைபெற்றது என்பதை எமது உறவினர், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம். ஈமக்கிரியைகளில் பங்குபற்றியவர்களுக்கும் அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் அனுதாபத்தில் பங்குபற்றியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தகவல்:
செ. துரைச்சாமி
11 ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு (9187)

"உயிர்ப்பும் உயிரும் நானே"

திரு. எலியாஸ் யோசேப்
(புலோப்பளை)

திரு எலியாஸ் யோசேப் காலமானார் இவர் காலஞ்சென்ற எலியாஸ், பாவுளாள் ஆகியோரின் புதல்வரும், செயமாலை யோசேப்பின் அன்புக் கணவரும், புஸ்பராணி செஸ்தியாம்பிள்ளை, பிரான்சிலுள்ள மேரி வெற்றிவேல், வேதநாயகம், பொலின், டேவிட்; அமலதாஸ் (யாழ். வித்தியத்திரியார் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், சுவக்கின், விக்ரோறியா, பொன்னம்மா, அக்னேஸ், திரேசம்மா ஆகியோரின் சகோதரரும், திரு. யா. செஸ்தியாம்பிள்ளை (புலோப்பளை), திரு. க. வெற்றிவேல் 'பிரான்ஸ்' ஆகியோரின் மாமனாரும். யெஸ்லீன், பிறின்சிலின், ஆன்சலின், ரெனி, தனு, ரெனோவ் ஆகியோரின் பேரனுமாவார் இன்று (19-1-1989) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு புலோப்பளை புனித இராயப்பர் சேமக்காலையில் அன்னாரின் நல்லடக்கம் நடைபெறும்.

தகவல்:
யோ. அமலதாஸ் (மகன்)
புலோப்பளை கிழக்கு,
புலோப்பளை, பளை. (9018)

சிவபாக்கியம்

வண்ணார்பண்ணை சிவபாக்கியம் காலமானார். இவர் காலஞ்சென்ற செல்லையாவின் அன்பு மனைவியாரும், இராசேஸ்வரி சண்முகம், உஷாயினி ஆனந்தராஸ், பவனிதரன் ஆகியோரின் தாயாரும், சண்முகம் (அடெமிஸ்). ஆனந்தராஸ் (மக்கள் வங்கி) ஆகியோரின் மாமியும், துளசிதா, ரகுதாஸ், மோகனதாஸ், தினேஸ், தனுசிதா ஆகியோரின் பேத்தியும், அகலியாவின் பூட்டியும் ஆவார். ஈமக்கிரியைகள் 82A13, ஆரும் லேன், கொட்டக்கேனை, கொழும்பு-13 இல் 19-01-89 பி. ப. 4-00 மணிக்கு நடைபெறும். இத்தகவலை உறவினர், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

(9019) தகவல் : சண்முகம்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்ஸ் [பிறைவேட்] லிமிட்டேட் இதாபனத்தாரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 204/8, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் 19 - 01 - 1989 திகதி நாவலர் வீதியில் வெளியிடப்பட்டது: Printed and Published by New Uthayan Publications (pvt) Ltd 292/2 Navalar Road, Jaffna on Thursday 19th January 1989

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org